Registered as [redacted]

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 11 (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:263

இப்போது நாம் யாழ் நகரிலும்

10-15 நிமிடங்களில்....

பாஸ்போட்,

அடையாள அட்டை படங்கள் மற்றும்



Album Binding
Photo Creations
Duro Laminating
Photo Graphing
Digital Video

MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB

62/16 STANLEY ROAD, JAFFNA. T.P 021-222 2884 JAFFNA ROAD, MANIPAY.

# திருமலையில் தமிழ் மக்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்குதல்!

## 50 பேர் காயம், 150 குடும்பங்கள் இடம்பெயர்வு - இரு லொறிகள், இரு படகுகள் தீவைப்பு

திருகோணமலை—

திருகோணமலை - சேருநுவரவில் தமிழ்மக்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களால் நேற்றுமுன்தினம் இரவு முதல் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளில் 50 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காயமடைந்தனர். தமிழர்களுக்குச் சொந்தமான இரு லொறிகள், இரு படகுகள் தீவைத்து அழிக்கப்பட்டன.

இதையடுத்து தங்கநகர் கிராமத்தில் வாழ்ந்த 150 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பு இடங்களுக்குச் சென்றுள்ளன. இதனால் திருகோணமலையில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

இந்தப் பகுதியில் வைத்து தேசிய புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நோக்குடனேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கிடுகுகளை எடுத்துச்சென்ற லொறி நேற்றுக் காலை 8.30 மணியளவில் சிங்களக் காடையர்களால் எரித்தழிக்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பகுதியால் பயணம் செய்த தமிழ்மக்கள் மேற்படி காடையர்களால் தாக்கப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் தொடர்பான வேலைத்திட்டங்களில்

# யுனிசெப்புடன் இணைந்து செயற்பட புலிகள் தலைமை விருப்பம் தெரிவிப்பு!



கொழும்பு—

சிறுவர்களின் போசாக்கு, கல்வி போன்ற வேலைத் திட்டங்களில் எதிர்காலத்தில் யுனிசெப் மற்றும் சிறுவர் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு விடுதலைப் புலிகளின் தலைமை விருப்பம் தெரிவித்துள்ளது குறித்து யுனிசெப் நிறைவேற்றுப் பணிப் பாளர் வரவேற்புத் தெரிவித்ததாக அர சியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த யுனிசெப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆன் வெனியினையும் அவரது குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகவிய லாளர்களுடன் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தச் சந்திப்பில் போரால் பாதிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தல்வரை ஆட்சிக்கவிழ்ப்பு இல்லை!

## பிரதமருக்கு ஜே.வி.பி உறுதிமொழி

கொழும்பு—

ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும்வரை தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எந்தவகையிலும் துணைபோகப்போவதில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு ஜே.வி.பி உறுதிமொழி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகளில் ஜே.வி.பி முழுமையாக அதிருப்தி கொண்டுள்ள அதேவேளை - பிரதமருடன் தொடர்புகளை மிக நெருக்கமாக வலுப்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பும் அதன் பின்னரும் பிரதமருடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பேச்சுக்களின்போது ஜே.வி.பி - நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்து சுயாதீனமாகச் செயற்பட்டாலும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடாதுஎன்ற உறுதிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை மாற்றம்

# பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றில்

இந்தச் சந்தப்பில் போரால் பாதிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை மாற்றம் நாளை இடம்பெறும்!

கொழும்பு —

நாளை அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறவுள்ளது. இதனால் அமைச்சர்கள் எவரும் வெளிநாடு செல்லக்கூடாதென்றும், வெளிநாடு சென்றுள்ள அமைச்சர்களை உடன் நாடு திரும்புமாறும் ஜனாதிபதி சந்தி ரிகா அறிவித்துள்ளார்.

கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தபின் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும்.

தற்போது வெளிநாடு சென்றிருக்கும் அமைச்சர்களான அனுரா பண்டாரநாயக்க, அனுர பிரியதர்சன யாப்பா, மங்கள சமரவீர ஆகிய மூன்று அமைச்சர்களையும் இன்று நாடு திரும்புமாறு ஜனாதிபதி அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

நாளை இடம்பெறவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பின்போது தற்போதைய அமைச்சர்கள் சிலரின் அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்பட இடமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் - அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவாய்ப்பிருப்பதாகவும் தெரிய வருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க)

# பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றில் தோற்கடிக்க அரசுக்குள் இரகசிய சதி!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பித்த பின்னர் அதனை நாடாளுமன்றில் தோற்கடித்து ஜனாதிபதியை நெருக்கடி நிலைக்குள் தள்ளிவிடும் சதி நடவடிக்கை - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக "ஹிரு" பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பொதுக்கட்டமைப்பு நகலை நாடாளுமன்றில் தோற்கடித்த பின்னர் ஜனாதிபதியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்தும், ஜனாதிபதி பதவியிலிருந்தும் விலக்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் குழுவொன்று முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

பொதுக்கட்டமைப்பிற்கு மக்கள் ஆதரவைப் பெறும் வகையில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இடம்பெறும் பிரசார இயக்கத்திற்கு அமைச்சரவையின் மூன்றில் இரண்டு பிரிவினர் பங்கேற்காததும் இந்தச் சதி நடவடிக்கையின் ஒரு பகுதியே காரணமாகும்.

இவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜனாதிபதியை நெருக்கடி நிலைக்குள் தள்ளும் சதி நடவடிக்கையின் பின்னணியில் கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவரும், முன்னர் ஜனாதிபதியை விட்டுப் பிரிந்தவருமான அமைச்சர் ஒருவரே உள்ளார்.

பொதுக்கட்டமைப்பு நகலை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ள இந்த அமைச்சர் - நாடாளுமன்றில் பொதுக்கட்டமைப்பு நகல் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனைத் தோற்கடிப்பதற்கு ஜே.வி.பியினருடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அரசிலிருந்து விலகிய ஜே.வி.பி - சிறிது காலம் நாடாளுமன்றில் அமைதியாக எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டபின்னர் ஜனாதிபதியை அந்தப் பதவியிலிருந்து விலக்குவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசியத்தின் குரல்!

யாழ்ப்பாணம் —

பௌத்த சிங்கள பேரினவாதத்தை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதையும், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கு முடிவு செய்து விட்டதையும் - சர்வதேச சமூகத்திற்கும், தென்னிலங்கை தலைமைகளுக்கும் தெரியப்படுத்தும் பிரகடனம் ஒன்றினை குடாநாட்டு மக்கள் இன்று வெளியிடவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள தமிழ்த் தேசியத்தின் குரல் என்ற இந்த நிகழ்வில் பிரகடனம் செய்யப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

கொழும்பு —

சுனாமி நிவாரண சபை குறித்த சட்டவரைபு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படுமாக இருந்தால் - அதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

அரசியல் யாப்பின் 157 ஆவது ஷரத்தின் கீழ் எவ்வித பிரிவினைவாத அமைப்புடனும் ஒப்பந்தம் செய்ய இயலாது. எனவே, இது போன்ற நடவடிக்கை எடுக்குப்படுமானால் அதற்கெதிராக அதியுயர் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அலுவலகங்கள் மீது மன்னாரில் நேற்றிரவு தாக்குதல்!

மன்னார் —

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் நகரில் விடுதலைப் புலிகளின் மூன்று அலுவலகங்கள் மீது நேற்றிரவு ஒரே நேரத்தில் கிரனேட் மற்றும் துப்பாக்கித்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்றிரவு 9.45 மணியளவில் சரமாரியான துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதுடன், கிரனேட் வெடிப்பு சத்தங்களும் கேட்டதாக மன்னார் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தலைமன்னார் வீதியிலுள்ள அரசியற்துறை செயலகம், முஸ்லிம் தெருவில் அமைந்துள்ள அரசியற்துறை நிர்வாகச் செயலகம் மற்றும் நீதித்துறை அலுவலகம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு மீனவர் சங்கங்களுக்கு 18.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்பாணம்——

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நான்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களுக்கும், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்திற்கும், நிறுவனங்களின் செயற்பாடுகளுக்காகவும், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதிக்காகவும் யூ.என்.டி.பி நிறுவனம் 18.75 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடந்த மாதம் அரச அலுவலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற யூ.என்.டீ.பி உதவித் திட்டம் சம்பந்தமான கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

காரைநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 1.435 மில்லியன் ரூபாவும், வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 6 மில்லியன் ரூபாவும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 1.265மில்லியன் ரூபாவும், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்துக்கு 7.885 மில்லியன் ரூபாவும், யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்திற்கு 2.45 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து நிறுவனங்களின் தேவை கருதி குளிரூட்டி வாகனங்கள், உழவுஇயந்திரம், பனிக்கட்டிஆலை, மோட்டார் சைக்கிள், கணினிகள், நிழல் பிரதி இயந்திரம், பக்ஸ் இயந்திரம் ஆகியவற்றை யூ.என்.டி.பி நிறுவனம் வழங்கவுள்ளது.

வியாபார நடவடிக்கைகளுக்காக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்திற்கு 2 மில்லியன் ரூபாவும், வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 1 மில்லியன் ரூபாவும் வழங்கப்படவிருக்கிறது.

மேற்படி கூட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாச பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பிரதேச செயலர்கள், யூ.என்.டி. பி. நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (21)

# சைவன் நற்பணி மன்றத்தின் உதவி வழங்கும் நிகழ்வு

பருத்தித்துறை——

அகில இலங்கை சைவன் நற்பணி மன்றத்தின் உதவி வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இளங்கோ சனசமூக நிலையத்தில் நிலையத்தின் தலைவர் செ.அம்பிகாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கரணவாய் தெற்கு செல்வபுரம் கிராமத்தில், நாகசக்தி அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதனுடன் ஆண்டு ஒன்று தொடக்கம் 12வரையான சகல மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும், பாலர் பாடசாலை ஆசிரியைக்கு துவிச்சக்கர வண்டி மற்றும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்பங்களுக்கு புடைவைகளும் வழங்கப் படவுள்ளன.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கி.சிவநேசன், கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கலாசார உத்தியோகத்தர் செல்வ சுகுணா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசத்தி, வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன், உடுப்பிட்டி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ரமேஸ், கல்விப் பொறுப்பாளர் தயாளன், அகில இலங்கை நற்பணி மன்றச் செயலாளர் இ.நாகேந்திரராஜா, மன்றத்தின் நிதிச் செயலாளர் இ.யோகேந்திரா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(12)

# கைதடி மேற்கில் வேரடி மண் நிகழ்வு

கைதடி——

கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடத்தும் பெண்களுக்கான பாரம்பரிய விளையாட்டு விழாவான வேரடி மண் நிகழ்வு, இன்று பிற்பகல் 1 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாதர் சங்கத் தலைவி ராகினி தர்மதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரதமவிருந்தினராகவும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்ட இணைப்பாளர் ர.சுஜித்தா, கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் வே.செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

கைதடி மேற்கு கிராம அலுவலர் சு.செல்வராஜா, சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவர் சு.பார்த்தீபன், கைதடி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.


# அரியாலை வி.கே. இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று

அரியாலை——

அரியாலை வி.கே. இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கலாபூசணம் மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும், யாழ். மாவட்ட கலைஞர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் அன்னாரின் உருவப் படத்திற்கு கலாபூசணம் க.உருத்திராபதி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலாநிதி அ.சண்முகதாஸ், நடிக கலாமணி வ. செல்வரத்தினம், நா.விமலநாதன், கலாநிதி கலாமணி, சி.சிவதாசன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் இங்கு உரை நிகழ்த்துவர். (91)



தென்னிந்திய திருச்சபையின் கொக்குவில் ஆரம்பப் பாடசாலையில் 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது சிறுவர்கள் அணிவகுப்பில் ஈடுபட்டுள்ளனர்.

# நாட்டுப்பற்றாளர் சாவடைந்தார்

கடந்த வியாழக்கிழமை சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்தார்.

நாட்டுப்பற்றாளர் கணேசமூர்த்தி (விநாயகமூர்த்தி கணேசமூர்த்தி) ஆதிவிநாயகர் கோவிலடி, வைரவப்புளியங்குளம், வவுனியா என்பவரே சாவடைந்தவர் ஆவர்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்——

லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு பண்ணைப்பாலத்திற்கு சமீபமாக நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 19 வயதுடைய ஜெ. கலீசியஸ் என்பவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஊர்காவற்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார்சைக்கிள் எதிரே வந்த லொறியுடன் மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

# கலை இலக்கிய அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம்——

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் மணவெளி கலை இலக்கிய அனுபவப் பகிர்வு நாளை மறுதினம் காலை 10 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் குப்பிளான் சண்முகம் தனது கலை இலக்கிய அனுபவப் பகிர்வினை எழுத்தாளர்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

# சிற்றூழியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் கழிவுப் பொருட்கள் அகற்ற முடியாதுள்ளது

## மாநகரசபை அதிகாரி தகவல்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நாளாந்தம் 60 மெற்றிக்தொன் கழிவுப் பொருட்கள் சேருகின்றன. இவ்வாறு சேருகின்ற கழிவுப் பொருட்கள் முழுவதையும் உடனடியாக அகற்றுவதற்கு சுத்திகரிப்புத் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுவதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையினால் நாளாந்தம் சேருகின்ற கழிவுப் பொருட்களில் 85வீதமான கழிவுப் பொருட்களை குறித்த தினத்திலே அகற்றக் கூடிய வளங்கள் யாழ். மாநகரசபையில் தற்போது இருக்கின்றது.

எஞ்சிய 15வீதமான கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு ஊழியர்கள் பற்றாக்குறையாக இருக்கின்றது. இதனால் கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்ற முடியாதுள்ளது.

நீண்ட காலமாக ஊழியர்கள் பற்றாக்குறை இருந்து வருகின்ற போதிலும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மாநகர சபை அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

தற்போது மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியர்கள் பழைய சனத்தொகைக்கு ஏற்பவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இங்கு வாழும் மக்களின் தொகைக்கு ஏற்ப ஊழியர்கள் இல்லாமையினால் முழுமையாக கழிவுப் பொருட்களை அகற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஐங்கரன் சனசமூக நிலையம் நடத்திய சைவ சமய போட்டிப் பரீட்சை முடிவு

கொக்குவில்——

யாழ். வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்கம் மகா கணபதி தேவஸ்தானத்தின் மஹோற்சவத்தையொட்டி ஐங்கரன் சனசமூக நிலையம் நடத்திய சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு:-

*பாலர் வகுப்பு* - இ.சங்கவி, த.சஜிகா, எஸ்.கஜலக்சன், ஆர். கீர்த்தனா, கே.கஜானி.

*தரம் ஒன்று* - ஆர்.தர்மீகன், எம்.சாத்வீகன், கே.தாட்சாயினி, ஆர்.தர்ணிகா, ரி.தாரணி.

*தரம் இரண்டு* - எஸ். சுதர்சன், எஸ்.தர்சிகா, எஸ். விநோதினி, பி. சர்வேஸ்வரசர்மா, ஆர். மாதினி.

*தரம் மூன்று* - கே.விஜய், பி.ஜோதினி, எஸ்.நிவோதசர்மா, ரீ.மாயவன், கே.சுரேகா.

*தரம் நான்கு* - என்.சிந்துஜன், இ.சேயோன், எஸ்.சிவரஞ்சன், கே.சாருஜன், பி.மயூரி.

*தரம் ஐந்து* - ஆர்.புவிதரன், ஜே.கஜதீபன், எஸ். மாதங்கி, ஆர்.நர்மதா, கே.தர்மிதா.

*தரம் ஆறு* - ரீ.அனுராம், பி. வைத்தீஸ்வரசர்மா, ஜே.டிலானி, ஜே.ஜானகி, எஸ்.அபிராமி.

*தரம் ஏழு* - எஸ். அர்ஜுன், இ.ஹரிபிரசாத், பி.துவர்ணிகா, வி.உஷாயினி, எஸ்.சுபாங்கன்.

*தரம் எட்டு* - எஸ்.கஜலக்ஷி, ரீ.ராஜரமணன், மதிவதனி, ரீ.பவித்திரா, அ.பிரதீபன்.

*தரம் ஒன்பது* - எஸ்.தர்சிகா, எஸ்.நிதர்சனா, எஸ்.மிதுலா, எஸ்.உமாசங்கர், பி.சிவலோஜிதா.

*தரம் பத்து* - எஸ்.தினலக்ஷன், எஸ்.மணிமாறன், எஸ்.யோகநாத், கே.ஜெனனி, ரீ.சுதர்சினி.

*தரம் பத்து* - கே.நிருஜன், பி. தார்சிகா, ரீ.புவனா, எஸ்.பவன், ஆர்.சஞ்சிகா. (206)

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகள் இன்று ஆராய்வர்

யாழ்ப்பாணம்——

யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது என்றும் -

யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்தலுடன் தொடர்புடைய மற்றும் மீள்குடியேற்றத்துக்குத் தடையாக இருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்கள் பணிமனையின் நிர்வாகச் செயலாளர் மௌலவி எஸ்.எம். ஸஹீல் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பண்டத்தரிப்பு – சம்பில்துறை வீதியைத் திருத்த கோரிக்கை

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து சம்பில்துறை வரையான டச்சு வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சில்லாலை கிராம அபிவிருத்திச்சங்கம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து சம்பில்துறை வரையான டச்வீதி - இந்தப் பிரதேச மக்களுக்கு மிகவும் பிரதானமானதும், பழமையானதுமான வீதியாகும்.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்கு பசளை ஏற்றிச் செல்லதும், விளைச்சலின் பின் விளைபொருட்களை ஏற்றுவதற்கும் பாவிக்கும் இந்த வீதி தற்பொழுது பழுதடைந்துள்ளது.

பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாததால் விவசாயிகள் பெரிதும் துன்பப்படுகின்றார்கள்.

வீதி திருத்தப்படாததால் பஸ் சேவையும் முழுமையாக சீராக நடைபெறுவதில்லை. மாணவர்களும், பொது மக்களும் இந்த வீதியூடாகச் செல்லும்போது பெரும் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர். இந்த வீதியில் உள்ள மதகுகள் இரண்டு பழுதடைந்துள்ளதால் விவசாயிகள் சேமித்து வைக்கும் நீர் வீணாக கடலுக்குள் செல்கிறது. மதகுகள் திருத்தப்படுவதன் மூலம் இதனைத் தடுத்து விவசாயிகளுக்கு உதவலாம்.

தங்கள் பராமிப்பிலேயே இந்த வீதி இருந்து 1996இல் வேலை ஆரம்பிக்கப்பட்டு குறுகிய தூரம் வரை நடைபெற்று நிதி ஒதுக்கீடு இன்மையால் வேலை தொடராது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்திரிகா - மங்கள இடையே பாரிய கருத்து முரண்பாடு!



கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் ஜனாதிபதி சந்திரிகாவுக்குள்ள அதிகாரத்தைக் குறைக்கும் வகையில், அமைச்சர் மங்கள சமரவீர உட்பட்ட சிலர் தயாரித்த செயற்திட்டம் குறித்த விபரம் ஜனாதிபதிக்கு தெரியவந்ததையடுத்து இருவருக்குமிடையில் பாரிய கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த செயற்திட்டம் தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், பிரதியமைச்சர்கள் இருவருக்குமிடையே இடம்பெற்ற இரகசிய கலந்துரையாடல் தொடர்பான அனைத்து விடயங்களையும், அந்த பிரதி அமைச்சர்கள் இருவரும் ஜனாதிபதிக்கு அறிவித்ததையடுத்து, இந்தக் கருத்து முரண்பாடு இருவருக்குமிடையில் உருவாகியுள்ளது.

ஜனாதிபதிக்கு இந்தத் திட்டம் குறித்து தெரிவித்த இரண்டு பிரதியமைச்சர்களில் ஒருவர் - மங்கள சமரவீரவினாலேயே சுதந்திரக் கட்சியில் இணைக்கப்பட்டவராவார்.



இந்தத் திட்டத்தை தெரிந்து கொண்ட ஜனாதிபதி, அமைச்சர் மங்கள சமரவீரவை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துக் கடுமையாக எச்சரித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சுதந்திரக் கட்சியின் அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களும், மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தை தமது தொகுதிகளில் ஆரம்பித்த அதேவேளை, மாத்தறை தொகுதியிலும் இந்தச் செயற்திட்டதை ஆரம்பிக்க மூன்று தடவைகள் முயன்றும், அதனை மங்கள சமரவீர தடுத்துவிட்டார். இது குறித்தும் ஜனாதிபதி அவரை எச்சரித்துள்ளார். இதேவேளை, அமைச்சரவை மாற்றம் விரைவில் நடை பெறவுள்ள நிலையில், அமைச்சர் மங்கள சமரவீர தற்போது வகிக்கும் அமைச்சும் மாற்றப்படலாமெனத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (தே)

## நாடாளுமன்ற கலைப்பு இல்லை: நீதியமைச்சர் தெரிவிப்பு!

கொழும்பு

ஆளும் கூட்டணி அரசிலிருந்து ஜே.வி.பி விலகிவிட்டதால், நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படமாட்டாது என்று நீதி அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அரசியல் யாப்பு சாதகமாக இருந்தாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளமாட்டார். அதற்கான தேவையும் இல்லை.

பொதுக் கட்டமைப்பு என்பது முன்னைய ரணில் அரசு செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் போன்றது அல்ல. சுனாமி நிவாரணப் பணிகளுக்கானதே இது. பொதுக் கட்டமைப்பு தொடர்பாக மக்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதனால் முன்பு எதிர்த்தவர்கள்கூட ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர்.

அரசிலிருந்து ஜே.வி.பி விலகியதற்கான காரணம் எதுவுமில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஒக்ஸ்பாம் வாகனங்களுக்கு ஒரு மில்லியன் டொலர் வரி




கொழும்பு

சுனாமி மீளமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இங்கிலாந்தின் ஒக்ஸ்பாம் நிறுவனம் - இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த வாகனங்களுக்கு ஒரு மில்லியன் டொலரை இறக்குமதி வரியாக இலங்கை அரசாங்கம் விதித்துள்ளது.

இந்தியத் தயாரிப்பான 25 மகேந்திர ரக ஜீப்களை தமது நிவாரணப் பணிகளில் பயன்படுத்த ஒக்ஸ்பாம் நிறுவனம் கொழும்புக்கு எடுத்து வந்தது.

ஆனால் உரிய இறக்குமதி வரி விதித்த பிறகே அவற்றை எடுத்துச்செல்லவேண்டும் என்று, இலங்கை அரசு உத்தரவிட்டது. இதனால் ஒரு மாதகாலம் கொழும்பிலேயே அவை முடக்கிவைக்கப்பட்டன. இதனால் கடந்த ஒரு மாதகாலமும் நாளொன்று 5 ஆயிரம் டொலரை இலங்கை அரசுக்கு ஒக்ஸ்பாம் செலுத்தி வந்தது.

இலங்கையில் அத்தகைய வாகனங்கள் தயாரிக்கப்படாததாலேயே வெளிநாட்டிலிருந்து அவற்றை ஒக்ஸ்பாம் நிறுவனம் இறக்குமதி செய்திருந்தது.

இவற்றைப் பாவனைக்கு எடுப்பது குறித்து நிதி அமைச்சிடம் ஒக்ஸ்பாம் நிறுவனம் பேசியபோது, மூன்று நிபந்தனைகளை அமைச்சு விதித்திருந்தது.

உரிய வரியைச் செலுத்தவேண்டும். அல்லது மீண்டும் அவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும் அல்லது இறக்கப்பட்ட வாகனங்களை அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் முடிவுசெய்துகொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இருந்தபோதும், ஒக்ஸ்பாம் நிறுவனம் உரிய வரியைச் செலுத்தியபிறகே வாகனங்களைத் தமது பாவனைக்கு எடுத்துச் சென்றுள்ளது.

சுனாமி நிவாரணப் பொருட்களுக்கான வரி நீக்கம் ஏப்ரல் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. அதனால்தான் வரி விதிக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைகளால் மீளமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரசு சார்பற்ற அமைப்புகள் கடும் விசனமடைந்துள்ளன. சுனாமி மீளமைப்புக்காக ஒக்ஸ்பாம் நிறுவனம் மட்டும் 300 மில்லியன் யூரோவை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பதிவேடுகளை அச்சிடுமாறு அரச அச்சகத்துக்கு ஆலோசனை

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான பதிவேடுகளை அச்சிடுமாறு, தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் அரச அச்சகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலோடு தொடர்புடைய பதிவேடுகள் குறிப்பிட்டளவு மாத்திரமே, தற்போது தேர்தல் திணைக்களத்தில் உள்ளதால், வாக்களிப்பு நிலையப் பொறுப்பாளருக்கும் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் தேவையான பதிவேடுகளை அச்சிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றுக்கான பதிவேடுகள் அச்சிடப்படாமை குறிப்பிடத்தக்கது. (தே)

## எஸ்.பி மீதான வழக்கு 27ம் திகதி விசாரணை



கொழும்பு

290 லட்சம்ரூபா பெறுமதியான சொத்துக்களை முறையற்ற வகையில் சேகரித்தமை தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள ஐ.தே கட்சியின் அமைப்பாளரும், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி திஸநாயக்க மீதான வழக்கு - எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்ற முதலாம் இலக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1994 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி தொடக்கம், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், அவரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சட்டரீதியான சொத்துக்களுக்கு மேலதிமாக 290 லட்சம் ரூபா பெறுமதியான சட்ட ரீதியற்ற சொத்துக்களைச் சேகரித்தார் எனத் தெரிவித்து, இலஞ்ச மற்றும் ஊழல் குற்ற விசாரணைப் பிரிவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (தே)

# சிங்கள பௌத்த சக்திகளை ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜாதிக ஹெல உறுமய அழைப்பு!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி உட்பட தேசப் பற்றுள்ள அனைத்து சிங்கள பௌத்த சக்திகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு, ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் --

பொதுக்கட்டமைப்பு தொடர்பான யோசனையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக பிரதமர் கூறியுள்ளார். இந்த உடன்படிக்கை சம்பந்தமாக ஜனாதிபதியும், நோர்வேயும், விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனும் இரகசியமான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல், அது சம்பந்தமாக மகாநாயக்கர்கள் உட்பட, மகா சங்கத்தினர் நாடாளுமன்றம் உட்பட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின் கருத்துக்களைப் பெறுவதுடன், அவர்களின் அனுமதியைப் பெறவேண்டும் என்பதற்காகவே நாம் உண்ணாவிரதம் மேற்கொண்டோம்

அதன்படி இந்த நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம். ஆனால் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்து அனுமதியைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் போதும் என்ற நிலையில் அரசாங்கம் இருக்குமானால், அதற்கு எமது எதிர்ப்பையும் அதிருப்தியையும் நாம் வெளிப்படுத்துகிறோம்

நாடாளுமண்றத்தில் மட்டும் இந்த யோசனையை நிறைவேறுவதை ஏற்க முடியாது. எமது அரசியல் அமைப்புக்கமைய, பிரிவினை வாத அமைப்புக்களுடன் எந்த வகையிலான உடன்படிக்கைகளையும் மேற்கொள்வது சட்டவிரோதமானது

2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தமானது - அரசியலமைப்புக்கு முரணானது.


அந்த உடன்படிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்னும் நீதிமன்ற விசாரணையில் உள்ளது. அவ்வாறான ஒரு நிலையில் பெதுக்கட்டமைப்பு எனப்படும் சுனாமி நிவாரண சபை யோசனை, நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்படுமானால், விடுதலைப் புலிகள் பிரிவினைவாதத்தைக் கைவிடுவதாக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அறிவிக்கவேண்டும்.

இன்றேல் விடுதலைப் புலிகள் நாடாளுமன்றத்தினுள் சட்டபூர்வமாக்கப்படுவார்கள். அதன்மூலம் அவர்களுக்கு சர்வதேச ரீதியாக கிடைக்கும் அங்கீகாரத்தைப் பற்றிப் புதிதாக சொல்லத் தேவையில்லை.

அடுத்ததாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு கட்சிக்கும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தைப் பகிர்வதற்கான ஆணையை மக்கள் வழங்கவில்லை.

குறிப்பாக யானை-புலி உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் வாக்குகளைப் பெற்று, ஆட்சியமைத்த ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணிக்கு அவ்வாறான எந்த ஆணையையும் மக்கள் வழங்கவில்லை.

அதேபோல சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட நலன்களுக்காக கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக செயற்படும் நிலைமை நாடாளுமன்றத்தில் காணப்படுகிறது. அவ்வாறான நிலையில் பொதுக் கட்டமைப்பு யோசனையை நாடாளுமன்றத்தில் மாத்திரம் நிறைவேற்றிக்கொள்வது போதுமானதாக இல்லை.



ஆனால் இதற்கு மக்களின்ஆணையைப்பெற வேண்டும். எமக்குப் பல வழிகளிம் அழுத்தங்களைக் கொடுக்கும் வெளிநாடுகளில் சிறு விடயங்களுக்குக்கூட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதால், இந்த விடயத்தில் இலங்கையில் மக்களின் கருத்தை அறிவதற்கு எந்த நாடும் எதிர்ப்புத் தெரிவிக்காது.

ஐ.தே.கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் ஆதரவைப் பெற்று, நாடாளுமன்றத்தில் இந்த யோசனையை நிறைவேற்றிக்கொள்ள அரசு முயன்றால் அதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

நாட்டை மேலும் ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளாது கட்சிபேதங்களை மறந்து, அனைத்து சிங்கள பௌத்த சக்திகளும் ஒன்றிணைந்து ஒருமனதாகச் செயற்பட வேண்டியகாலம் இப்போது மலர்ந்துள்ளது.

ஹெல உறுமயவுக்கு, எதிராகவும் நாட்டுக்கு எதிராகவும் கடந்தகாலங்களில் செயற்பட்டவர்களின் தவறுகளை மறந்து, நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் ஒன்றிணைந்து பணியாற்ற நாம் தயார் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே தேரர் மேலும் தெரிவித்தார்.

# கொன்பெடரேசன் கிண்ண உதைபந்தாட்டம்

## ஐரோப்பிய சம்பியன் அணியை உலக சம்பியன் வீழ்த்தியது!



பிராங்பேர்ட் —

கொன்பெடரேசன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் ஐரோப்பிய சம்பியனான கிறிஸ் அணியை 3-0 என்ற கோல் அடிப்படையில் உலகக்கிண்ண சம்பியனான பிறேசில் அணி வெற்றி கொண்டது.

பிராங்பேர்ட்டில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மற்ற நாடுகளைப்போல் அல்லாமல், இவ்விரு நாட்டு அணிகளும் முன்னணி வீரர்களுடன் விளையாடின.

ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் அட்ரியானோ அடித்த அபாரமான கோலால் பிரேசில் முன்னிலை பெற்றது.

இடது, வலது புறமாக மாறிமாறி ஒவ்வொரு வீரராக அவர் ஏமாற்றி இடது காலால் பந்தை உதைத்து கோலாக்கியது, அரங்கில் குழுமியிருந்த 42 ஆயிரத்துக்கும் மேலான ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

முதல்பாதி ஆட்டம் முடிய 40 வினாடிகள் இருக்கையில், கில்பர்டோ கடத்திக் கொடுத்த பந்தை ராபின்ஹோ கோலாக்கினார். இதனால் பிரேசில் 2-0 என முன்னிலை பெற்றது.

77ஆவது நிமிடத்தில் பதில் வீரராகக் களமிறங்கிய ஹுனினோ, அடுத்த 4ஆவது நிமிடத்தில் அடித்த கோல், பிரேசிலின் எண்ணிக்கையை 3ஆக உயர்த்தியது. அவர் அடித்த பந்து சுழன்றவாறு சென்று கோலாகியது.

தொடக்க ஆட்டத்தில் வீரர்கள் வெளிப்படுத்திய திறமை திருப்திகரமாக உள்ளது. அனைத்து அம்சங்களிலும் அற்புதமாக ஆடினர். கொடுக்கப்பட்ட வேலையை கச்சிதமாகச் செய்தனர். மொத்தத்தில் குழுவாக விளையாடி எளிதாக வெற்றி பெற்றனரென பிறேசில் அணியின் பயிற்சியாளர் கார்லஸ் அல்பர்டோ கூறினார்.



பிரேசில் அணியில் முக்கியமான வீரர்களான கேஃபு, ராபட்டோ கார்லோஸ், முன் கள நட்சத்திர வீரர் றொனால்டோ ஆகியோர் விளையாடவில்லை. அவர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது.

அதேசமயம் ஐரோப்பிய சம்பியன் போட்டிகளில் விளையாடிய கிறீஸ் அணியில் 18 வீரர்கள் இடம்பெற்றிருந்தனர். என்றாலும் ஒரு கோலையும் அவர்களால் அடிக்கமுடியவில்லை.

பிறேசில் அணி நாளை மெக்சிக்கோவுடன் 2ஆவது ஆட்டத்தில் பங்கேற்கவுள்ளது.

## முன்னாள் சம்பியன் மெக்சிக்கோ ஜப்பானிய அணியை வென்றது!



ஹேனோவர் —

கொன்பெடரேசன் கிண்ணத் துக்கான உதைபந்தாட்டத்தில் முன்னாள் சம்பியன் மெக்சிக்கோ முதல் வெற்றியைப் பெற்றது.

ஹேனோவரில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் மெக்சிக்கோ 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பான் அணியைத் தோற்கடித்தது.

2006இல் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிக்கு முதல் நாடாகத் தகுதிபெற்ற ஜப்பான், மெக்சிக்கோவுக்கு எதிரான ஆட்டத்தில் தொடக்கத்திலேயே முன்னிலை பெற்றது.


அத்சுஸி யானகிசவா ஜப்பானுக்கு முதல் கோலை 12ஆவது நிமிடத்தில் அடித்தார்.

அதுவே அந்த அணி அடித்த கடைசி கோலாக அமைந்தது.

அதன்பின்னர், பொறுப்புடன் விளையாடி 2 கோல்களை அடித்தது மெக்சிக்கோ. 39 ஆவது நிமிடத்தில் ஜின்ஹாவும், 64ஆவது நிமிடத்தில் தலையால் முட்டி ஜோஸ் போனெஸ்காவும் கோல் அடித்தனர்.

1999இல் நடைபெற்ற போட்டியில் பிரேசிலைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது மெக்சிக்கோ.

அந்த அணியைச் சேர்ந்த முக்கிய வீரர்கள் 4 பேர் கோபா லிபரெடாடரெஸ் போட்டியில் விளையாடி வருகின்றனர்.



என்றாலும் முதல் ஆட்டத்தில் ஜப்பானை அந்த அணி வென்றது.

அத்துடன் மெக்சிக்கோவுக்கு இது 19ஆவது தொடர் வெற்றியாக அமைந்தது.

அடுத்துவரும் 20ஆம் திகதி பிரேசில் அணியுடன் மெக்சிக்கோ விளையாடவுள்ளது.

# விளையாட்டு

## கவுண்டி போட்டிகளில் கங்கூலி அபார ஆட்டம்!



லண்டன் —

கவுண்டி கழகத்தில் விளையாடிவரும் கங்கூலி நன்றாக விளையாடி வருகிறார். அவருடைய பழைய திறமை மீண்டும் பளிச்சிட ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

தற்போது கங்கூலியின் கிளாமர்கான் அணியும், மிடில் செக்ஸ் அணியும் மோதிவருகின்றன. 4 நாள் கொண்ட இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் கிளாமர்கான் அணி 584 ஓட்டங்களை எடுத்தது. ஷெரி 226 ஓட்டங்களையும், ஹெமட் 103 ஓட்டங்களையும், ஹுக்ஸ் 134 ஓட்டங்களையும் எடுத்தனர்.

அடுத்து முதல் இனிங்ஸை தொடங்கிய மிடில் செக்ஸ் அணி 435 ஓட்டங்களை எடுத்தது. ஜாய்ஸ் 155 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து 2ஆவது இனிங்ஸுக்கு களமிறங்கிய கிளாமர்கான் அணி 3 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களை எடுத்திருந்தது. கங்கூலி 56 ஓட்டங்களை எடுத்தநிலையில் ஆட்டமிழக்காமல் தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார். அவர் 71 பந்துகளைச் சந்தித்து இந்த ஓட்டங்களை எடுத்தார். இதில் 6 பவுண்டரிகள் அடங்கும்.

இன்னும் ஒருநாள் ஆட்டம் இருக்கிறது. மிடில்செக்ஸ் அணி இன்னும் ஒரு இனிங்ஸில் ஆட வேண்டிருப்பதால் போட்டி பெரும்பாலும் சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது.

## இந்திய மண்ணிலும் ருவென்ரி-20 கிரிக்கெட்!

புதுடெல்கி —

கிரிக்கெட் போட்டிகளில் முன்பு டெஸ்ட் போட்டி மட்டுமே இருந்தது. பின்னர் ஒரு நாள் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் டெஸ்ட் போட்டியைவிட ஒருநாள் போட்டிக்கு மவுசு அதிகமானது. இந்தநிலையில் தற்போது 20 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியை அறிமுகப்படுத்தி விளையாடி வருகிறார்கள்.

தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் அவுஸ்ரேலிய அணி 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வந்தது. நியூஸிலாந்து, பாகிஸ்தானிலும் இந்தப் போட்டி நடைபெறுகின்றது.

இந்தியாவில் இதுவரை 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடைபெறவில்லை. ஆனால், டெல்கி கிரிக்கெட் கழகம் முதன் முதலாக இந்தப் போட்டியை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்திய கிரிக்கெட் சபையின் அனுமதி பெற்றபின் போட்டிகள் நடத்தப்படும்.

## கிரேக் சப்பலின் கருத்தால் இந்தியாவில் பெரும் சர்ச்சை!

மும்பை —

கப்டன் தெரிவு முறை தொடர்பாக சப்பல் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இந்திய அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்ற கிரேக் சப்பல் பெங்களூரில் பேட்டியளித்தார். அப்போது அணியை முதலில் தெரிவு செய்யவேண்டும். அதற்குப் பின் வழிநடததிச் செல்லக்கூடிய கப்டனைத் தெரிவு செய்வதே சிறந்த உத்தி என்றார்.


சப்பலின் இந்தக் கருத்துக்கு இந்திய அணியின் முன்னாள் கப்டன் பாலி உம்ரிகர் ஆதரவு தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் மற்றொரு முன்னாள் கப்டன் சந்து போர்டே எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

79 வயதான உம்ரிகர் கூறுகையில் - சப்பலின் யோசனை மிகச் சரியானது. அணியைத் தெரிவு செய்த பின்னர் கப்டனை முடிவு செய்யலாம். அணித் தெரிவில் பயிற்சியாளருக்கு அதிகாரம் அளிக்கவேண்டும் என்பதை ஏற்க இயலாது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட்டில் கூட இந்த முறை கிடையாது. தெரிவுக் குழுக் கூட்டத்தில் கப்டன், பயிற்சியாளர் கலந்து கொள்கிறார்கள். இவர்களது ஆலோசனைக்கு தெரிவாளர்களும் மதிப்பளித்து வருகின்றனர் என்றார்.

இந்த விவகாரத்தில் 70 வயதான சந்து போர்டே கொஞ்சம் காட்டமாகவே பேசினார். முதலில் கப்டனைத் தெரிவு செய்யாவிட்டால், அணித் தேர்வின் போது கப்டனின் கருத்தை எப்படி கேட்டறியமுடியும். இந்த வீரரைத் தெரிவு செய்யலாம் அல்லது வேண்டாம் என்பது போன்ற கப்டனின் கருத்துக்களை அறிய இயலாது.

இந்த முறை இந்திய கிரிக்கெட்டுக்கு புதுமையானதாக உள்ளது. இது நடைமுறைக்கு சாத்தியமா என்பது பற்றி தெரியவில்லை. வீரர்களின் தெரிவில் பயிற்சியாளருக்கு அதிகாரம் அளிக்கத் தேவையில்லை. பயிற்சியாளர், கப்டன் தெரிவிக்கும் கருத்துக்கு தெரிவாளர்கள்



முக்கியத்துவம் அளித்தாலே போதுமானது என்று சந்து போர்டே கூறினார்.

## முன்னாள் இந்திய கப்டன் மரணம்!

இந்தூர் —

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் முஸ்தாக் அலி, மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நேற்றுக்காலை தூக்கத்திலேயே மரணமடைந்தார். அவருக்கு வயது 91.

17.12.1914இல் பிறந்த இவர், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இந்திய கிரிக்கெட் அணி வீரராக இருந்தார். இந்திய அணியின் கப்டனாகவும் இவர் பணியாற்றினார். வெளிநாட்டில் சதமடித்த முதல் இந்திய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1936ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக இந்தச் சாதனையை அவர் நிகழ்த்தினார்.

இவருக்கு 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். 1964ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது இவருக்கு வழங்கப்பட்டது.

## சைக்கிளோட்ட வீரர் போட்டியில் மரணம்!

ரிக் —

இத்தாலி சைக்கிள் ஓட்ட வீரர் அலசியோ ஹெல்பட்டி போட்டியொன்றில் கலந்து கொண்டிருந்தபோது திடீரென மரணமானார்.

15 கிலோ மீற்றர் தூரம் சென்றிருந்தநிலையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு கீழே விழுந்தார். சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது.

## சதமடித்த கிரிக்கெட் வீரர் மைதானத்தில் மரணம்!



போட்டியில் சதமடித்தபின் பவிலியன் திரும்பிய கப்டன் ஷான் பிரெஞ்ச் பரிதாபமாக மரணமடைந்தார்.

இங்கிலாந்தின் பிரபல பாரிங்டன் கிரிக்கெட் கழகத்துக்காக ஷான் (39) விளையாடி வந்தார். சோமர்செட் அணிக்கெதிரான போட்டியில் 154 ஓட்டங்களை விளாசினார். பின்னர் பவிலியன் திரும்பிய அவர் ஒரு கப் கோப்பி குடித்தார்.

விக்கெட் கீப்பராகச் செயற்பட்டதால், கால்காப்பை மாட்டிக்கொண்டு மீண்டும் களமிறங்கத் தயாரான சமயம் திடீரென மாரடைப்பு ஏற்படவே ஷான் மரணத்தின் பிடியில் சிக்கினார்.

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்கேற்குமாறு வேண்டுகோள்!

சுதுமலை

மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்குத் தவறாமல் சகல திணைக்கள பிரதிநிதிகளும் பிரசன்னமாகவேண்டும் என, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வ.ரூபினி அறிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு சில செயலகங்கள் சமூகம் கொடுக்கத் தவறுகின்றன.

இதனால் அவர்களுக்கு பிரதேச அபிவிருத்தி, பிரதேச குறைபாடுகள் என்பன விளங்குவதில்லை.

எனவே இனிவரும் கூட்டங்களில் அனைத்துத் திணைக்கள பிரதிநிதிகளும் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும் எனவும், கூட்ட அறிக்கைகளைப் பார்வையிட்டு அதன் முன்னேற்ற அறிக்கைகளை அவர்கள் கூட்டங்களுக்குக் கொண்டுவரவேண்டும் எனவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (44)

# விவசாயிகளுக்கு முட்கம்பிகள் வழங்கல்

பருத்தித்துறை

மறவன்புலோவில் விவசாயம் செய்யும் பகுதிகளில் -கால்நடைகளின் தொல்லையால் கஷ்டப்படும் விவசாயிகள், தமது விவசாயக் காணிகளைச் சுற்றி முட்கம்பி வேலிகளை அமைப்பதற்கு, பட்டினிக்கெதிரான நிறுவனம் முட்கம்பிகளை வழங்கியுள்ளது.

85 றோல் முட்கம்பிகளைக் கைதடி கமநலசேவை மூலம் அந்தப்பகுதி கமக்கார அமைப்பிடம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)


# புற்றுநோய் வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலையின்றி நோயாளர்கள் அவதி

தெல்லிப்பளை

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலை வசதி ஏற்படுத்தப்படாமையால் நோயாளர்கள் பெரிதும் அல்லற்படுகின்றனர்.

அதிகாலையிலேயே இங்கே வந்து சேரும் நோயாளர் - மாலை வரை சிகிச்சை பெறவேண்டியுள்ளது. இதனால் அவர்கள் தேநீர் அருந்தக்கூட இங்கு வசதிகள் இல்லாதிருப்பதால், மயக்கமடைய நேரிடுவதாக நோயாளர் தெரிவித்தனர்.

எனவே இது சம்பந்தமாக உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நோயாளர் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது. (101)






சீ.பி கணினிக் கல்வி நிலையத்தின் பயிற்சிக் கூடத்தை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பருத்தித்துறை பிரதேசத்தில் 70 வீடுகள் உலக வங்கி நிதியுதவியுடன் புனரமைப்பு

வடமராட்சி

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க, உலக வங்கியின் நிதியுதவியுடனான திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன.

இதில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் 70 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

தெண்டமானாறு தெற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் வடமத்தி, பொலிகண்டி மேற்கு, கெருடாவில் போன்ற பிரதேசங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்குகே இந்த வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

யுத்தத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியாகச் சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நட்டஈடு பெறவுள்ளோர் சொந்தக் காணி உடையோராகவும், மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குட்பட்ட வருமானம் உடையோராகவும், 1983-2002 இடைப்பட்ட காலப்பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றும், இவ்வாறு தெரிவு செய்யப்படும் நட்ட ஈடு பெறுவோர்களின் விபரம் மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் எனவும், பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன் தெரிவித்தார்.

# இராமநாதன் நுண்கலை மாணவர்களின் இசை நடன விழாவும் கருத்துப் பகிர்வும்

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக நடன, இசை, சித்திரமும் வடிவமைப்பும் பிரிவு மாணவர்கள் -ஜூலை மாதம் 15 ஆம் திகதி முதல் இசை நடன விழாவொன்றை நடனத்துறை வளாகத்தில் நடத்தவுள்ளனர்.

தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ள இசை நடன விழாவில், இசை நடன ஆற்றுகை நிகழ்வுகளும், அவை தொடர்பான கருத்துப் பகிர்வும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களால் ஓவிய, சிற்பக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

ஜூலை மாதம் 15 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள இசை, நடன, ஓவிய சிற்பக் கண்காட்சிக்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதன் நுண்கலைக் கழக கவின் கலை மன்றம், இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ஜெ.லக்ஷனா
முகவரி : யாழ்ப்பாணம்.

ஆறாவது அகவையில்



பெயர் : பி.மிலன்
முகவரி : நெல்லியடி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# கடன் வழங்குவதற்கென சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 1 மில்லியன் ரூபாவை யூ.என்.டி.பி நிறுவனம் வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை, புலோலி, பண்டத்தரிப்பு, சங்கானை, காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைக்குட்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பலசரக்குக் கடை, தேனீர்க்கடை, சலூன்கள், சலவைத்தொழிலகம், சைக்கிள் கடை, கடலுணவுப் பொருள் வியாபாரிகள், வாகன உரிமையாளர்கள் ஆகியோருக்கு இவை கடன் அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது. (21)

# நவநாள் திருப்பலி

கொக்குவில்

நவாலியூர் புனித சம்பேதுறு பாவிலு தேவாலய வருடாந்த நவநாள் திருவிழா -நாளை திங்கட்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் மாலை 5.15 மணிக்கு செபமாலை ஆராதனை, யைத் தொடர்ந்து திருப்பலி இடம்பெறும்.

28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றமும் இடம்பெறும்.

29 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருப்பலி முடிவில் திருச்சொருபப் பவனி நடைபெறும். நிறைவாக திருச்சொரூப ஆசீர் வழங்கலுடன் வருடாந்த உற்சவம் நிறைவடையும்

# சின்னஞ்சிறு செய்திகள்

## கந்தமுருகேசனாரின் சிரார்த்ததினம்

பருத்தித்துறை

தென்புலோலி மூதறிஞர் கந்தமுருகேசனாரின் 40 ஆவது சிரார்த்ததினம் கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மந்திகை எரிபொருள் நிரப்பு நிலைய சந்தியிலுள்ள அவரது சிலைக்கு மலர்மாலை அணிவித்து அனுஷ்டிக்கப்பட்டது. (17)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

அரியாலை

அரியாலை தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில், அரியாலை சனசமூக நிலையத்தில் ஜே/93 கிராம அலுவலர் இ.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக மா.சுந்தரமும், செயலாளராக து.இராமநாதனும், பொருளாளராக எஸ்.ரி.கனநாதனும், உபதலைவராக தி.செல்வரட்ணமும், உப செயலாளராக வி.ஜெகதீஸ்வரனும், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.தயாளன், க.இரத்தினம், க.அரியராஜா, பி.ஜே.பெனடிக்கன், எல்.பொனிபொஸ், க.சோமசேகரன், கே.விவேகானந்தன், ஐ.சத்தியமூர்த்தி ஆகியோரும் -

கணக்காய்வாளராக ந.குகதாசனும், போஷகராக இ.சண்முகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். (55)

## வீதி திருத்தப்படவில்லை

அரியாலை

அரியாலை பகுதியில் புறாடி முன் ஒழுங்கை, பெந்தக் கோஸ்தே முன் ஒழுங்கை, ரயில்வே வீதி ஆகியன திருத்தப்படாமல், பெரும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால், இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாத இந்த வீதிகள்- குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் விபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது பற்றி யாழ். மாநகர சபை கவனத்தில் எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (55)

## மஹா சங்காபிஷேகமும் விசேட பூஜையும்

கொக்குவில்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹா சங்காபிஷேகமும், உற்சவமும் நாளை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

காலை 7.30 மணி முதல் ஸ்ரீதேவி பூமாதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு, நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு நவகலச அபிஷேகமும், விசேட தீபாராதனையும் நடைபெறும்.

மாலை சாயரட்சை பூஜையைத் தொடர்ந்து 5.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெறும். (206)

# இரண்டாம் தவணைப் பரீட்சை

தெல்லிப்பளை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட தரம் 2 தொடக்கம் , தரம் 11 வரையுள்ள மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை கோட்ட மட்டத்தில் நடாத்தப்படவுள்ளது.

எனவே பாடசாலை அதிபர்கள் தத்தமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை வகுப்பு ரீதியாகக் குறித்து, தமக்கு தேவையான வினாப்பத்திரங்களின் எண்ணிக்கையையும் அனுப்பி வைக்குமாறு தெல்லிப்பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாயநாதன் அறிவித்துள்ளார். (101)

# தங்கச் சுரங்கம்



புக்கானன் சிற்பி

எந்தவொரு விளையாட்டு அணிக்கும் வீரர்கள் தேர்வு. பயிற்சியாளர். பயிற்சி என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்று விடயங்களும் ஒரு அணிக்குச் சரியாக அமைந்துவிட்டால். அந்த அணி உலகில் எந்தவொரு அணியாலும் வெல்லப்படமுடியாததாக சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு சிறந்த உதாரணம் அவுஸ்ரேலியா.

அவுஸ்ரேலியா தனது தேசிய கிரிக்கெட் அணியைப் பலப்படுத்துவதில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின்றதென்பது கிரிக்கெட் அவுஸ்ரேலியாவின் ஒவ்வொரு செயற்பாட்டிலிருந்தும் விளங்கிக் கொள்ளலாம். சிறப்பாகப் பந்து வீசும் பிரட்லீக்கு கூட அணியில் இடம் கிடைப்பது சந்தேகமாகி. அவுஸ்ரேலிய அணியை பல்வேறு நெருக்கடி மிக்க போட்டிகளில் வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்ற மைக்கல் பெவன் மற்றும் டரன் லீமன் ஆகியோரார் ஓரிரு போட்டிகளில் சிறப்பாக விளையாடாத காரணத்தால் அவர்களை அணியிலிருந்து நீக்கி. அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை உள்வாங்கி அணியைக் கட்டுக்கோப்பாக வைத்துள்ளதென்றால். அதன் ஒவ்வொரு துல்லிய அவதானிப்புடன் கூடிய செயற்பாடே காரணமென்றால் எவ்வித தவறுமில்லை.

இந்த வகையில் இந்திய கிரிக்கெட் அணிக்கு சிறந்த பயிற்சியாளராக இருந்து அண்மையில் ஒப்பந்த காலம் முடிய தனது ஒப்பந்தத்தை நீடிக்க மனமின்றி விலகிச் சென்ற ஜோன்ரைட் 'விஸ்டன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் இந்திய அணி ஏன் பலவீனமாக உள்ளதென்பதனை மிகவும் தெளிவாக கூறியுள்ளார். அவர் தனது பேட்டியில் - இந்திய அணியில் இடம் பெறும் வீரர்களை தேர்வு செய்யும் குழுக்கள் அடிக்கடி மாற்றப்படுவது வலிமையான அணியை உருவாக்குவதற்கு பெரும் தடையாக உள்ளது. ஒவ்வொரு முறையும் புதிய தேர்வுக் குழு பொறுப்பேற்கும்போது. அந்தக் குழுவில் இடம் பெறுபவர்கள் தாம் சார்ந்த மண்டலத்திலுள்ள வீரர்களுக்கு வாக்களித்தனர்.

ஆனால் அணியைப் பயிற்றுவிக்கும் எனக்கு வாக்களிக்கும் வாய்ப்பு தரப்படுவதில்லை. வெற்றி தோல்வியைப் பொறுப்பேற்கும் பயிற்றுவிப்பாளருக்கு அதுபற்றி மட்டுமே கருத்துக்களை கூற வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை மாற்றப்பட வேண்டும். எனவே சிறந்த பயிற்சியாளரும். சிறப்பான பயிற்சியும் இருந்தால் மட்டும் ஒரு அணி வெற்றியை ருசித்து விட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு 5 வருடமாக சிறப்பான பயிற்சியை வழங்கி அந்த அணியை முன்னேற்றிய ஜோன்ரைட்டின் கூற்று எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதனை இந்திய கிரிக்கெட்சபை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றது?

கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் குறிப்பிடுவது போல இந்திய அணியில் பார்த்த முகங்களே நீண்டகாலமாக உள்ளன. அணிகுறித்து எவ்வித மாற்றத்தையும் காணவில்லை. ஒருவரின் விளையாட்டை ஆய்வு செய்து அவரைவிட சிறந்த வீரரை அணிக்குள் உள்வாங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலை தொடருமெனில்



# விளையாட்டு அரங்கம்

இந்திய அணி வீழ்ச்சிப் பாதையில் செல்வது தவிர்க்க இயலாதது என்றும் அவர் கூறுகின்றார்.

இந்த நிலையில் இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக கிரேக்சப்பல் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கும் ஜோன்ரைட்டின் நிலைதான் ஏற்படுமோ என்பது இனித்தான் தெரியவரும்.

முன்னைய பயிற்சியாளரான ஜோன்ரைட் இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்கள் சிலருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே தனது ஒப்பந்த காலத்தை மேலும் நீடிக்காமல் சென்றதாக கவாஸ்கர் எழுதியிருந்தார். ஆனால் வீரர்கள் குறித்து நன்றாக கூறியுள்ள ஜோன்ரைட் இந்திய தேர்வுக் குழுவினருடன் ஏற்பட்ட முரண்பாட்டினால் தான் விலகிச் சென்றாரா என நாம் ஏற்றுக்கொள்ளலாமா?



படம் போடப்பட்டவர்கள்

ஏனெனில் அவரின் விஸ்டன் சஞ்சிகைக்கான பேட்டி அதனையே உணர்த்துகின்றது. எனினும் ஜோன்ரைட்டின் இந்திய அணிக்கான காலம் முடிவடைந்து விட்டதால். அது குறித்த உண்மைகளும் வெளிவராமலேயே போகுமல்லவா?

- யசோ.

அதிபாரக்குத்துச்சண்டை உலகில் இன்றும் முதன்மையானர் என்றால் அவர் கஸியஸ் கிளே முகமது அலிதான். அவருக்குஅடுத்து பரபரப்பாகப் பேசப்பட்டவர் என்றால் அவர் மைக்டைஸன் தான். 'இவரளவிற்கு குத்துச்சண்டைக் களத்திலாயினும் சரி, அவரது தனிப்பட்ட வாழ்விலும் சரி சர்ச்சைக்குள்ளாகியவர்கள் வேறு யாரும் இல்லை என்று தான் கூற வேண்டும். இவரது குத்துச்சண்டைச் சாதனைகள் அபாரமானவை. ஐம்பது போட்டிகளில் வெற்றி கண்ட இவர் தோல்வி கண்டது ஆறில் மட்டுமே. வெற்றி பெற்ற ஐம்பதில் நாற்பத்திநான்கு KNOCK OUT முறை என்றால் அவரது திறமை சொல்லித் தெரியவேண்டியதில்லை.



மெக் பிறைட் இனி என் காலம்

Photo / Neil McDaid

கடந்த வாரம் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கெவின்மெக் பிறைட் - மைக் டைஸனுடன் போட்டியிட்டார். போட்டிக்குமுன்னான பத்திரிகையாளர் சந்திப்பில் ஒரு ஈயை நசுக்குவது போல கெவினை நசுக்குவேன் என்று டைஸன் கூறியது வெறும் வார்த்தைக்குத் தான் போல் உள்ளது. ஏனெனில் இந்தப் போட்டியில் மைக்டைஸன் தோல்வியுற்றார். அதுவும் வித்தியாசமான தோல்வி. ஆறாவது சுற்று முடிவில் தனது மூலையில் ஒதுங்கிக் கொண்ட டைஸன் மீண்டும் எழுந்து போட்டியிட மறுத்து விட்டார். எனக்குத் தொடர்ந்து சண்டையிடுவதில் இஷ்டமில்லை. நான் களைப்பாக இருக்கிறேன். எனக்கு எழுவதற்கு விருப்பமில்லை என்றார் டைஸன். இவருக்கு இதுதோல்வியும் அல்ல. வெற்றியும் இல்லை. இருந்தாலும் இன்று முப்பத்தெட்டு வயதாகும் டைஸனின் வசந்தகாலம் 1986 இல் ஆரம்பித்தது. தனதுமுதல் வெற்றியை டைசன் அடைந்த போது வயது 20. இந்த மட்டப் போட்டிகளில் மிகவும் இளவயதில் வென்றவர் என்ற சாதனையையும் இவர் ஏற்படுத்தியிருந்தார்.

மைக் டைஸன் இத்துடன் குத்துச்சண்டைப் போட்டிகளுக்கு விடை கொடுத்து

# புதிய அத்தியாயம்

தனது கிறிஸ்தவ மதம் சார்ந்த அமைப்பின் பொதுச் சேவையில் ஈடுபடப் போவதாக அறிவிக்கிறார். பொஸ்னியா. ருவாண்டா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உதவுவதே என் நோக்கம் என்று தன் எதிர்காலத்திட்டம் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்.



மைக் டைஸன் என்றும் வீரன்தான்

கெவின் மெக்பிறைட் தனது வெற்றி பற்றிக் கூறுகையில் - ஒரு வெற்றி பற்றிப் பெருமிதம் அடைவதாயின் எதிராளியின் தகுதி பற்றியதும் அதில் அடங்கும். உலகின் அதிசிறந்த வீரரான மைக்டைஸனையே நான் வெற்றி கண்டுள்ளேன். அந்த வகையில் தான் எனதுவெற்றியின் கனதியை அளவிட வேண்டும் என்று அடக்கமாகக் கூறியிருக்கிறார் மெக்பிறைட்.

- அன்ரனி.

# மறுபடியும் மரியா

மகளிர் ரெனிஸ் உலகில் இன்று முன்னணியில் இருப்பவர்களில் கணிசமானோர் யாரென்று பார்த்தால் அவர்கள் ரஷ்ய வீராங்கனைகளாகவே இருப்பார்கள். ஆனால் எங்கே சர்வதேச ரஷ்ய ரெனிஸ் வீராங்கனைகள் என்றும், அவர்களைக் காணோமே என்ற அங்கலாய்ப்பும் ரசிகர் மத்தியில் நிலவியது. அதற்கெல்லாம் பதிலளிப்பது போல பேர்மிங்ஹாம் புற்றரை ரெனிஸ் போட்டிகளில் ரஷ்யாவின் பதினெட்டே வயதான மரியா ஷரபோவா வெற்றிவாகை சூடியது மட்டுமன்றி, இந்தவருடம் கிண்ணத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

புற்றரை மைதானம் என்ற வகையில் இது அவரது பதினேழாவது வெற்றியாகும். இவரிடம் 4 – 2, 4 – 6, 6 – 1 என்று தோல்வி கண்டவர் சேர்பியாவின் ஜெலினா ஜென் கோவிக். இவருடன் மோதும்போது தான் தனது முழுத்திறமையையும் காட்டி விளையாடவில்லை என்றும், இருந்தும் சாவகாசமாக விளையாடிச் சுலபமான வெற்றி ஒன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது என்கிறார். கடந்த இரண்டுவருட காலத்துக்குள் WTA சுற்றுப் போட்டிகளில் பத்தாவது வெற்றியும், 2005 ஆம் ஆண்டில் மட்டும் மூன்றாவது வெற்றியுமாகும். இது தொடரவேண்டும் என்பதே மரியா ஷரபோவாவின் விருப்பம். இதைவிட முக்கியமானது இவர் தனது விம்பிள்டன் சம்பியன் கிண்ணத்தைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதாகும். அடுத்த வாரத்தில் விம்பிள்டன் போட்டிகள் தொடங்கவிருக்கும் நிலையில், இந்த வெற்றி மரியா ஷரபோவாவிற்கு பெரும் ஊக்கமாக இருக்கும். எல்லோரது கனவும் விம்பிள்டன் கிண்ணம் வெல்வதுதான். இந்தமுறை மரியா ஷரபோவா விம்பிள்டன் கிண்ணத்தை வெல்லுவது மட்டுமல்ல அதனைத் தக்கவைத்துக்கொள்ளவும் வேண்டும். நீண்டகாலம் ரசிகர்களை ஏமாற்றிய இந்தப் பதினெட்டே வயதான ரெனிஸ் தாரகை விம்பிள்டன் போட்டிகளைத் தன்கைப்படுத்துவாரா விரைவில் பதில் தெரியும்.

- மக்டலின்.




ஜெலீனா நாலம் கனியும்



மரியா ஷரபோவா கனவுக்கிண்ணம்

## எதுவரை போகுமோ?



அஸாபா பவல் (ஜமைக்கா)
100 m உலக சாதனை 9.77 செக்.

முன்னைய சாதனை

ரிம்மொண்ட் கொமரி - 9.78 செக் (2002)
மொறிஸ் கிறீன் - 9.79 செக் (1999)

# வசந்தம் வருமா?

2006ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற விருப்பது ஜேர்மனியில். போட்டியை நடத்துகின்ற நாடு என்ற ரீதியில் ஜேர்மனி நேரடியாகவே தகுதி வெற்றுள்ளது.



ஒலிவர் கான் சுமைகள் அதிகம்

கடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்துக்குத் தெரிவான ஒலிவர்கான் தலைமையிலான ஜேர்மன் அணி பிறேசிலிடம் தோல்வியடைந்து கிண்ணத்தைத் தவறவிட்டிருந்தது. அதுபோன்றே இம்முறை சொந்த மண்ணில் நடைபெறும் போட்டியிலாவது கிண்ணத்தைக் கைப்பற்றுமா என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கருத்துக் கணிப்பொன்றில் 27 வீதமானோரே ஜேர்மனி கிண்ணத்தைச் சுவீகரிக்கும் என்று நம்புகின்றார்கள். 58 வீதமானோர் கிண்ணத்தை ஜேர்மனி வெல்லும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவிட்டார்கள்.

இதற்குக் காரணம் ஜேர்மனி அணி சென்ற வருடம் போர்த்துக்கலில் நடைபெற்ற யூரோ கிண்ண உதைபந்தாட்டத்தில் முதல் சுற்றில் வெளியேறியதிலிருந்து அணியின் செயற்பாடுகள் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை.

நிலைமை இவ்வாறிருக்க, ஜேர்மனியே உலகக் கிண்ணத்தை வெல்லும் என்று நம்பிக்கை கொண்டுள்வார் புதிய பயிற்சியாளர் ஜூர்கன் கிளீன்ஸ்மன்.

யூரோ கிண்ணத்தில் ஜேர்மனிக்கு ஏற்பட்ட படுதோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகிய ஜேர்மனிய பயிற்சியாளர் ரூடி வொலரின் இடத்துக்கு புதிதாக வந்தவரே கிளீன்ஸ்மன். இவரும் ஜேர்மன் அணியின் முன்னாள் புகழ் பூத்த வீரரே.

சிநேக பூர்வ ஆட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தும் இந்தப் பயிற்சியாளர் – அணியின் சீரான வளர்ச்சிக்கும், வெற்றி இலக்கை நோக்கிய பயணத்துக்கும் இவைதான் கைகொடுக்கின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை ஜேர்மனியின் மினி உலகக்கிண்ணம் என்றழைக்கப்படும் CONFEDERATION CUP போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இரண்டு வாரகாலமாக நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் பிறேசில் ,ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி உட்பட எட்டு நாடுகள் பங்கு கொள்கின்றன.



கிளீன்ஸ்மன் முன்வைத்த கால்கள்

நடப்பு உலக சம்பியன் பிறேசில், முன்னாள் உலக சம்பியன் ஆர்ஜென்ரீனா என்பவற்றுடன் ஜேர்மனி மோதுவது தமது பலவீனங்களை இனங்காண்பதற்கு பெரிதும் உதவுவதோடு, உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன் ஜேர்மனிக்கு நல்ல பயிற்சி வெறும் சந்தர்ப்பம் இதுவென்றும் கருதப்படுகிறது.

இது குறித்து பயிற்சியாளர் கிளீன்ஸ் மன் கூறுகையில்–

நீண்டகாலத்துக்கு பின்னர் இந்தத் தொடர் நடைபெறுவதால் இது எங்களுக்கு சுமையாக இருந்தாலும், அடுத்த வருடமும் இதேநிலையே காணப்படுமென்கிறார்.

2000 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்டத் தொடரின் பின் எந்தவொரு தொடரிலும் கிண்ணத்தைக் கையகப்படுத்தாத (கடந்த உலகக் கிண்ணம் உட்பட) ஜேர்மனி அணியின் தொடர் தோல்விகளுக்கு CONFEDERATION தொடர் முடிவுக்கு கொண்டுவர நல்ல வாய்ப்பென்கிறார் அவர்.

ஆனால் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டாலும், அணியின் யதார்த்த நிலை முன்ன கூறியது போல கவலைக்கிடமாகவே உள்ளது.

கடந்த வாரம் வலுக்குறைந்த ரஷ்யாவுடன் நடைபெற்ற 4 போட்டிகள் கொண்ட சிநேக பூர்வத்தொடரையே ஜேர்மனியால் கைப்பற்ற முடியவில்லை. இரண்டு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வென்றிருந்ததனால் தொடர் சமனிலையில் முடிவடைந்தது.

அத்தோடு, 'பட்டகாலிலே படும்' என்பது போன்றதொரு சம்பவமும் நடந்தேறியுள்ளது. அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் 'லிவர்பூல் கழகம்' சம்பியனாக காரணகர்த்தாவாக விளங்கிய ஜேர்மனியின் நம்பிக்கைக்குரிய DEFENSIVE MID FIELDER டைற்மன் ஹன்மன் பாதத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவால் விளையாட முடியாத துரதிஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. இதுவும் ஜேர்மனி அணிக்கு பாரிய சறுக்கலாகவே கருதப்படுகின்றது.

எனவே பிறேசில் , ஆர்ஜென்ரீனா போன்ற அணிகளின் உயர் தகைமையோடு ஒப்பிடும் பொழுது– சென்ற நூற்றாண்டில் 1954, 1974, 1990 களில் உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி, இந்த நூற்றாண்டில் முதன்முறையாக கிண்ணம் வெல்லும் கனவு, அவர்களின் கையில் – மன்னிக்கவும் காலில் இல்லையென் தோன்றுகிறது.

– விமலன்.

# ஒப்பந்தங்கள் மட்டுமல்ல



சொகைப் அக்தர் நிமிர்ந்து நடக்காது

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் இன்னொரு வருடத்துக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. கடந்தவருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த பதினேழு வீரர்களும் மீளவும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் புதிய ஒப்பந்த நிபந்தனைகளில் ஏற்பட்ட சர்ச்சைகளால் யார் யார் முன்னைய ஒப்பந்தத்தில் இருந்து விலக்கப்படுவார்கள், யார் யார் புதிதாக உள்வாங்கப்படுவார்கள். என் பதில் சர்ச்சைகள் காணப்பட்டன. இந்த விடயத்திலும் நாயகன் சொகைப் அக்தர் தான். எப்பொழுதும் சொகைப் அக்தர் தனிவழி. இவரது உடல் நிலைத்தகுதி இன்மைபற்றி, இவரை விட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நன்கு அறிந்திருந்ததுபோலத் தெரிகிறது. அதுவும் பாகிஸ்தான் அணித்தலைவர் ஒரு டொக்டரைவிட மேலான நிலையில் இருந்து சொகைப் அக்தரின் உடல்நிலை பொறுத்து 'தகுதியற்றவர்' என்று சான்றிதழ் வழங்கிவிட்டார். இதன் காரணமாக இந்திய மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தில் லாவகமாகச் சொகைப் அக்தர் 'கழற்றி' விடப்பட்டார். ஆனால் அவரது திறமையின் முன் இவர் களால் ஒன்றும், செய்ய இயலவில்லைப் போலத் தெரிகிறது. இப்போது ஒப்பந்த வீரர்களுள் இவரும் ஒருவர்.



யொகானா உயர்வுக்கு வழி உண்டா

பாகிஸ்தான் தனது வீரர்களை மூன்று வகையில் பிரித்து ஒப்பந்தம் செய்துள்ளது. 'A' பிரிவில் இன்சமாம் உல்ஹக், யூசுப் யொகானா, அப்துல் ரசாக், அக்தர் ஆகி யோர் அடங்குவார்கள். இவர்கள் ஏறத் தாழ மாதத்துக்கு 3500 டொலர்கள் பெறுவார்கள்.

'B' பிரிவில் அடங்குபவர்கள் மாதாந்தம் 2100 டொலர்களும், 'C' பிரிவில் அடங்குபவர்கள் 1200 டொலர்களும் பெறுவார்கள். மேற்படி பிரிவுகள் புள்ளிகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டு தெரிசெய்யப்பட்டுள்ளார்கள். இந்தநடைமுறைக்கு இன்னும் சில விதிகளையும் உள்ளடக்க பாகிஸ்தான் கிரிக்கெட்சபை முடிவு செய்துள்ளது. சதம் அடித்தால், ஐந்து விக்கெட் பெற்றால், நான்கு பிடிகள் எடுத்தால், இவற்றுக்குத் தனித்தனியே ஐந்து புள்ளிகள் சேர்க்கப்படும் என்றும் கூறப்படுகிறது. எனவே எதிர்காலத்தில் வீரர்களின் தரக்கணிப்பு இன்னும் இறுக்கமாவதுடன், மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிக்கொணரவும் இது தூண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

– ஜோசப்கிருஷ்ணா.

# எழுத்தின் நிறம் சிவப்பல்ல

கிரிக்கெட் ஆட்டங்களில் இடதுகைத் துடுப்பாட்ட வீரருக்கு பந்து வீசுவது சிறிது கஷ்டமானது என்றும், அதேபோல் இடது கைப் பந்துவீச்சாளரைச் சமாளிப்பதும் சிறிது கஷ்டமானது என்றும் பொதுவாக ஒரு அபிப்பிராயம் உண்டு. விஞ்ஞான ரீதியாக இது எந்தளவிற்குஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது சரியாகத் தெரியாவிட்டாலும், இடதுகைத் துடுப்பாட்ட வீரர்கள் பொறுத்து தெரிந்த விடயம் ஒன்றுண்டு. முச்சதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்கள் குவித்த டெஸ்ட் வீரர்கள் என்று பார்த்தால் மொத்தம் பதினெட்டுப் பேரில் எட்டுப்பேர் இடதுகைத் துடுப்பாட்ட வீரர்களாகவே காணப்படுகிறார்கள். பிறைன் லாறா இருமுறை இச்சாதனையை புரிந்துள்ளார். மத்தியூ ஹைடன், சேர் காபீல்ட் சோபர்ஸ், ஜயசூரிய, மார்க் டெய்லர், ஜோன்எட்றிச், பொப் கௌப்பர் மற்றும் கிறிஸ்கெல் ஆகியோரே இவர்கள்.1957/58 இல் பாகிஸ் தானுக்கு எதிராக காபீல்ட் சோபர்ஸ் 365 ஓட்டங்கள் பெற்று லென்கட்டனின் 364 சாதனையை முறியடித்த காலத்தில் இருந்து, இடதுகைத் துடுப் பாட்ட வீரர்களின் கையே மேலோங்கியுள் ளது. இதன்பின் 1993 /94இல் சென்.ஜோன்ஸ் அன்ரிகுவாவில் பிறைன்லாறா இங்கிலாந்துக்கு எதிராக 375 ஓட்டங்கள் பெற்று சாதனை புரிய முப்பத்தாறு வருடங்கள் தேவைப்பட்டது. அதுவும் இடதுகைத் துடுப் பாட்ட வீரராலேயே முடிந்தது. அதே வேளை 2003/04இல் மத்தியூ ஹைடன் சிம்பாப்வேக்கு எதிராக 380 ஓட் டங்கள் பெற்று லாறாவின் சாதனையை முறியடித்தார். இவரும் இடதுகைத் துடுப்பாட்ட வீரர் தான். இதனைக் குறுகிய காலத்தில் 400 ஓட்டங்கள் பெற்று மீண்டும் லாறா முறியடித்தார். இதோடு 1994இல் இங்கிலாந்தின் வோரிக்ஷயர் கவுன்டி அணிக்காக லாறா 501 ஓட்டங்கள் பெற்றதும் ஒரு சாதனை. இன்னொரு கண்ணோட்டத்தில் 300 ஓட்டங்களுக்கு மேற்பட்ட ஓட்டங்கள் பெறப்பட்ட இருபது சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும்போது, இடதுகைத் துடுப்பாட்ட வீரர் மத்தியூஹைடனின் ஓட்ட வேகமே முதன்மை யானது. இவர் 380 ஓட்டங்கள் பெற எதிர்கொண்ட பந்துகள் 437. (38 X4 - 11 X 6)



பிறைன் லாறா எண்ணிக்கை கூடுமா?

90களின் பின்னர் பெறப்பட்ட ஒரு தரவின் படி வலதுகைத் துடுப்பாட்ட வீரர்களை விட இடதுகைத் துடுப்பாட்ட வீரர்களே கூடுதலாக முச்சதம் பெற்றுள்ளனர். இடது சாரிகள் என்ற வகையில் லாறா இரண்டு முறை மத்தியூ ஹைடன், ஜயசூரிய, மார்க்ரெய்லர், கிறிஸ்கெல். வலது சாரிகள் கிரகாம் கூச், இன்சமாம் உல்ஹக், வீரேந் திரஷேவாக்.

இன்னொரு கண்ணோட்டத்தில் ஆட்ட மிழக்காமல்.... என்ற வகையில் ஒரே யொரு வலதுசாரி. அவர் இங்கிலாந்தின் வோல் ரர்கமன்ட். இடதுசாரிகள் என்ற வகையில் லாறா வின் 400, சோபர்சின் 365, மார்க் ரெயிலரின் 334 , பில் எட்ரிச்சின் 310 என்பன ஆட்டமிழக்காமல் பெறப்பட்டவை.



மத்தியூ ஹைடன் சேர்க்க முடியுமல்லவா

எனவே முச்சதச் சாதனைகள் என்று வரும் போது பெரும் பான்மை யான வலதுகைத் துடுப்பாட்ட வீரர்களை விட சிறு பான்மையான இடதுகைத் துடுப்பாட்ட வீரர்கள் ஓஹோ என்று புகழ் பெற்றிருப்பது தெரிகிறது.

– நிர்மலன்.

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies....
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
- ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# செந்தளிர் சிறுவர் இல்லத்துக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டுவிழா!





முல்லைத்தீவு——

செந்தளிர் சிறுவர் இல்லத்துக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு - நேற்று முன் தினம் நடைபெற்றது.

கடந்த ஆண்டு சுனாமி அனர்த்தத்தால் முற்றாக அழிக்கப்பட்ட செந்தளிர் சிறுவர் இல்லத்தை அமைப்பதற்கான காணி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக் குடியிருப்பு, வள்ளி புனம் பகுதியில் தெரிவு செய்யப்பட்டு, அங்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பில் இயங்கும் இந்தச் சிறுவர் இல்லத்துக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சுதர்சினி தலைமையில் நடைபெற்ற - இந்த நிகழ்வின் பிரதமவிருந்தினர்களை செந்தளிர் சிறுவர் இல்ல மாணவர்கள் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து பொதுச் சுடரை நோர்வே பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் வசந்தி பிரான்ஸிஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் உப தலைவர் கதிரவேல் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனக் கொடியை நிறுவனப் பணிப்பாளர் கமலாம்பிகை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து சுனாமியால் இறந்த செந்தளிர் சிறார்களின் திருவுருவப் படங்களுக்கு, அவர்களுடைய பெற்றோர்கள், செந்தளிர் சிறார்கள் மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோர் மலர் வணக்கம் செலுத்தினர்.

இந்த நிகழ்வில் செந்தளிர் இல்ல கட்டடத்துக்கான அடிக்கல்லை நோர்வே உள்நாட்டு அமைச்சின் பிரதிநிதிகள் பாபரோபக்கள், செல்ஒஸ்பி, வசந்தி பிரான்ஸிஸ், கிருஸ்ரிளுட்டன், மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நாட்டினர்.

இந்த நிகழ்வில் செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்களினால் வரவேற்புப் பாடல், நினைவுப் பாடல் ஆகியன நிகழ்த்தப்பட்டன.

ஆசியுரையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழீழ மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழினி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்துக்கான நினைவுச் சின்னம் கையளிக்கப்பட்டது. நினைவுச் சின்னத்தை நோர்வே உள்நாட்டு அமைச்சின் பிரதிநிதி பாபரோபக்கள் வழங்கி வைக்க, அதனை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத் திட்ட இணைப்பாளர் சுதர்சினி பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள்நோர்வே புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூன் - 19

1910 : வொஷிங்டனில் வைத்து முதன் முதலாக திருமதி ஜோன் புரூஸ் என்பவரால் "தந்தையர் தினம்" கொண்டாடும் பழக்கம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

1911 : இத்தாலியிலுள்ள பைசா கோபுரத்தின் சாயும் அளவைக் கணித்து வருவதற்காக தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப வியலா ளர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

1917 : ரஷ்ய இராணுவத்தில் பெண்கள் படையணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

: முப்பது வயதுக்கு மேற்பட்ட திருமணமான பெண்களுக்கு பிரிட்டனில் வாக்குரிமை வழங்கப்பட்டது.

1918: பலூன் மூலம் பிரிட்டிஷ் ஒற்றர் "பாஷ்விட்ஸ் மியாவ்" லக்ஷம்பர்க்கில் இறக்கப்பட்டது.

: அமெரிக்காவும், பிரான்ஸும் இணைந்து போர்த் தொடர்பகம் ஒன்றை அமைத்துக் கொண்டன.

1923: போர்க்கடன் பற்றி விவாதிக்க, அமெரிக்கா - பிரித்தானிய அரசுகளின் மாநாடு நடைபெற்றது.

1949: பிரான்சிய ஆதிக்கத்தில் இருந்த மேற்கு வங்காளத்தின் சந்திரநாகுர் பிரதேச மக்கள் பொதுக் கருத்துக்கணிப்பில் இந்தியாவுடன் சேர விருப்பம் தெரிவித்தனர்.

1953: எகிப்தின் இராணுவக் கவுன்ஸில், எகிப்தைக் குடியரசு நாடென்று அறிவித்ததோடு, முகம்மது நஜீப் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் செயற்படுவார் என்றும் அறிவித்தது.

1961: பிரிட்டன் 62 ஆண்டுகாலமாக குவைத் மீது வைத்திருந்த காப்பாதிக்கத்தை விட்டுக்கொடுத்தது.

1965 : மூன்று ஆண்டுகளாக உதவி ஜனாதிபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த "கேணல் ஹௌரி பௌமிடியான்" தலைமையில் இராணுவத்தின் உதவியோடு அல்ஜீரியாவில் இரத்தம் சிந்தாப் புரட்சி நடந்தது.

1981: இந்தியா அப்பிள் என்ற 380 கிலோ நிறைகொண்ட செயற்கைக்கோள் ஒன்றை, பிரான்ஸ் நாட்டின் கயானா பகுதியிலுள்ள கூரு என்ற ஏவுதளத்திலிருந்து ஐரோப்பிய விண்வெளிக் கழகத்தின் "ஏரியன்" என்ற ஏவுகலம் மூலம் ஏவப்பட்டது.

1985: தென் துருவம் அவுஸ்ரேலியாவை நோக்கி சிறிதளவு நகர்ந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. வட துருவம் நிலையாக இருந்தபோதும்கூட, தென் துருவம் தொடர்ந்து நகர்ந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

2001: பெய்ரூட்டில் இருந்து சிரியப் படைகள் முழுமையாக வாபஸ் பெற்றன.

தொகுப்பு - சந்துரு

# அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் பயனாளிகளுக்கு உதவி வழங்கல்!

கிளிநொச்சி——

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நொராட், போரூட் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் கண்ணகைபுரம் கிராம அலுவலர் பிரிவின் முட்கொம்பனில் நடைமுறைப்படுத்தப்படும் வருமான அதிகரிப்புத்திட்ட பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு - கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவித்திட்டம் குறித்த கருத்துரைகளை போரூட் நிறுவன வெளிக்கள அலுவலர் சிவனேஸ்வரி, தமிழர் புனர்வாழ்வுக்கழக அக்கராயன் பிரதேச உதவிப் பணிப்பாளர் நல்லையா, அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து வருமான திட்டத்துக்குரிய பொருட்கள் வழங்கப்பட்டன. இவற்றில் கோழி வளர்ப்புக்கென ஒரு பயனாளிக்கு 10 ஆயிரத்து 400 ரூபா வீதம், 5 பயனாளிகளுக்கு 52 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும், ஆடுவளர்ப்புக்கென ஒரு பயனாளிக்கு 12 ஆயிரத்து 250 ரூபா வீதம், 5 பயனாளிகளுக்கு 60 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான பொருட்களும், மீன் வியாபாரத்துக்கென ஒரு பயனாளிக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் 2 பயனாளிகளுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும், சிறு வியாபாரத்துக்கென ஒரு பயனாளிக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களுமாக மொத்தம் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

# நாட்டுப்பற்றாளர் சிவகாந்தனுக்கு இறுதி வணக்க நிகழ்வு!

கிளிநொச்சி——

சுகயீனம் காரணமாக கடந்த வியாழக்கிழமை மரணமடைந்த நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் இறுதி வணக்க நிகழ்வு -கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் விரிவுரையாளர் புலிமாறன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் பூதவுடலுக்கு அவரது துணைவியார், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொப்பாளர் கலைவாணன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் நினைவுரையை போராளியான வதனன், கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாந்தனின் பூதவுடல் கிளிநொச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



# சூழல் பாதுகாப்புக் கருத்தரங்கும், நூல் வெளியீடும்

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கும், நூல் வெளியீடும் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தினதும், கிழக்குப் பல்கலைக் கழகத்தினதும் ஏற்பாட்டில் இடம்பெற்றது. சூழல் முகாமைத்துவம், இயற்கைவளம் பேணுதல் தொடர்பான நூல் வெளியிட்டு வைக்கப் பட்டது. தொடர்ந்து சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நாடகப் போட்டி

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி ஆர் நிறுவனமும், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையும் இணைந்து முல்லைத்தீவு பாடசாலைகள் மட்டத்திலான நாடகப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

இதன் இறுதி நாள் நிகழ்வு - புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியம் வித்தியாசாலையில் நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

# கணினி அன்பளிப்பு

கிளிநொச்சி——

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களைத் தேற்றும் வகையில் 7 பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் வேணாவில் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று, கணினி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொண்டது.

# மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் கிராமதரிசிப்பும், வீரமுரசு நிகழ்வுகளும்

புதுக்குடியிருப்பு——

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக கிராம தரிசிப்பும், வீர முரசு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதுடன், உடன் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டும் வருகின்றன. இவை இடம் பெற்று வரும் கிராமங்களில் சிரமதானப் பணிகளும் இடம்பெற்று வருகிறது. இந்தக் கிரம தரிசிப்பு நிகழ்வால் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிகழ்வுகளின்போது சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து, மக்களுக்குத் தெளிவான விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் வேளினி, முல்லைத்தீவு மாவட்ட போராளிகள், மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் வேணுகோபால் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தின் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், பிரதேசப் பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வெ)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

திருக்குறள்

# நமது நோக்கு

## தென்பகுதி அரசியல் குழப்பங்களும் வடக்கு - கிழக்கு மக்களின் நிலையும்!

ஜே.வி.பி - அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக கடந்த வியாழனன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அதன் தலைவரான சோமவன்ச அமரசிங்க அறிவித்துள்ளபோதிலும், அரசுக்கும் அதற்குமான பின்கதவு தொடர்புகள் இன்னமும் இருந்த வண்ணம் இருப்பதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து கசியும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி விரும்பினால் மீண்டும் கூட்டமைப்பு அரசில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஏற்றவகையிற்தான் அரசாங்கம் தனது எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரான சுசில் பிறேமஜயந்த கூறியுள்ளதை வைத்துப்பார்த்தால் மேற்குறித்த அரச வட்டாரச் செய்திகளின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்ள முடியும்.

ஜே.வி.பி யினரின் இந்த 'விலகல்' முடிவுக்கு எதிராக ஐ.ம.சு முன்னணி அவர்கள் மீது எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் இப்போதைக்கு எடுக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளதைப் பார்க்கும்போது- ஜே.வி.பியுடனான உறவை முற்றாகக் கை கழுவிவிடும் எண்ணம் எதுவும் அரசுக்கில்லை என்பது தெளிவாகின்றது.

இதேவேளை, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவிற்கும், கட்சியின் மேல்மட்டத்தலைவர்கள் ஒரு சிலருக்கெதிராகவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கருத்துக்களை வெளிப்படையாகவே கூறத்தொடங்கியுள்ளதால், ஜே.வி.பிக்குள் உட்கட்சி முரண்பாடுகள் தீவிர நிலையை எட்டியுள்ளதாகவும், கட்சி மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் சூழலில் தொலைநோக்குச் சிந்தனையற்ற முறையில் பொதுக்கட்டமைப்பு என்ற சாதாரண - கனதியற்ற பிரச்சினையை ஒரு பாரிய விவகாரமாக்கியதன் மூலம் கட்சி தேசிய மட்டத்திலும் ஒரு பேரினவாத குரூர அடையாளத்தை சோமவன்ச மற்றும் வீரவன்ச போன்ற தலைவர்கள் உண்டு பண்ணி விட்டதாக சிரேஷ்ட உறுப்பினர்கள் அவர்கள் மீது அதிருப்தி அடைந்துள்ளதாகவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இது ஒருபுறமிருக்க, கட்சிக்குள் உறுப்பினர்களுக்கும் தலைமைத்துவத்திற்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண் நிலைகளிலிருந்து திசைதிருப்பும் புதிய நகர்வாக புதிய அரசொன்றை அமைப்பதற்காக புதிய கூட்டணி ஒன்றினை உருவாக்கும் முயற்சியொன்றை ஜே.வி.பி தலைவர்கள் தொடங்கியுள்ள செய்திகள் ஊடகங்களூடாக பகிரங்கமான நிலையில் - ஐ.தே.கட்சி மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி போன்றவை தமது கட்சிக்குள் ஜே.வி.பியின் ஊடுருவலாளர்கள் நுழைந்து கட்சி உறுப்பினர்களைத் தம்வசம் இழுக்கும் நடவடிக்கைகள் ஏற்படாவண்ணம் கண்காணிப்பதில் தீவிரமாக உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றிலுள்ள அதிருப்தியாளர்களையும், ஹெல உறுமய பிக்குகளையும் இணைத்து தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்த ஜே.வி.பியினர் தீவிரமாக திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவித்துள்ள அதேசமயம், இது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர, போன்றோர்களிடம் முதற்கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த முதற்கட்டப் பேச்சுக்கள் வெற்றியென வெளிப்படையாகவே கருத்தை வெளியிட்டுள்ள ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் - அடுத்தகட்டப் பேச்சுக்கள் விரைவில் நடத்தப்பட்டு முற்போக்குச் சிந்தனை கொண்டோரின் கூட்டணியொன்று உருவாக்கப்படும் என்றுள்ளார்.

இருந்தாலும், ஜே.வி.பியினர் ஐ.ம.சு முன்னணியில் இருந்துகொண்டு ஆடிய அரசியல்கூத்துக்கள் யாவும் ஏனைய கட்சிகள் அறியாதவையல்ல எனக்கூறும் ஒரு அரசியல் நோக்கர் - சோமவன்ச, வீரவன்ச போன்றவர்களை நம்பி அரசொன்றில், அல்லது கூட்டணி ஒன்றில் ஒருவர் இணைவதில் உள்ள ஆபத்தை கடந்த ஓராண்டுக்கும் அதிககால ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஆட்சி உணர்த்தியுள்ளதால் இந்தக் கூட்டணி அமைக்கும் முயற்சி வெற்றியடையப் போவதில்லை என்றும் - ஜே.வி.பியினர் மீண்டும் அரசுக்குள் ஏதோ ஒருவகையில் ஒட்டிக்கொள்ளும் வாய்ப்பே அதிகம் உள்ளதெனவும் கூறியுள்ளதையும் நிராகரிக்க முடியாது.


இன்றைய சூழலில் ஆட்சி கலைந்தோ, அல்லது ஜனாதிபதியால் கலைக்கப்பட்டோ புதிய தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை கட்சிகளுக்கு எற்படுமேயானால் - ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணிக்கு எதிராக சுதந்திரக்கட்சி யாருடன் கூட்டுச்சேர முடியும்? ஜே.வி.பி. தனித்து இயங்கும் வலுவுள்ளதா? என்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

ஏற்கனவே கொள்கைரீதியில் எந்தவகையிலும் உடன்பாடில்லாத சந்தர்ப்பவாத கூட்டணியாக உருவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - மீண்டும் அதே சந்தர்ப்பவாத நோக்கில் - மற்றொரு இனவாதக் கூட்டணியாக அதே கூட்டுக் கட்சிக்குள் சேர்ந்து உருவாகாது என்பதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது.

எனவே, இப்போது நிலவும் தென்பகுதி அரசியல் குழப்பங்கள் அனைத்தும் சிறுபான்மைகளை மேலும் மேலும் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் மட்டுமல்ல தொலைநோக்குச் சிந்தனையுடனும் செயற்பட வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்தி நிற்கின்றன.

சிங்கள ஆட்சித் தலைமைகள் மாறலாம், கூட்டணிகள் புதிய பெயர்களில் புதிய முகமூடிகளுடன் தம்மை இனங்காட்ட முயலலாம். ஆனால், அவர்களுள் இருக்கும் பழைய இனவாத சாத்தான்கள் தமது குணத்தை மாற்றப்போவது கிடையாது என்பது வரலாறு தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ள அனுபவப்பாடமாகும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வழிப்பிள்ளையாருக்கு தெருத்தேங்காய் அடிக்க விடாதவர்கள் எதைத் தரச் சம்மதிப்பார்கள்?

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் புறப்பட்ட ஜே.வி.பியும் அரசியல் பிக்குகளும் தாங்கள் எதிர்பார்த்தபடி விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிராகச் சிங்களவர்கள் கிளர்ந்தெழ மறுத்துவிட்டது கண்டு சோர்ந்து போயிருக் கிறார்கள். தலதா மாளிகைக்கு முன் சாப்பிட மறுத்துப் படுத்த தேரர் வெற்றிகரமாகத் தனது உண்ணா விரதத்தை மகா நாயக்க தேரர்களின் தலையில் போட்டு தமது மானத்தையும், உயிரையும் காப்பாற்றிக் கொண்டார். கோட்டையில் பட்டினி கிடந்த பிக்குவை பொலிஸார் கடத்திச் சென்றதாகப் பழியைச் சுமத்தப் பார்த்தாலும் பிக்குமார்கள் அவரைத் தூக்கி அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றும் புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து உண்மையைத் தெரிவித்துவிட்டன. பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு மட்டுமல்ல, புலிகளைச் சாட்டிக் கிளப்பிவிடும் எதிர்ப்பும் இனி சிங்களவர் மத்தியில் தென்னிலங்கையில் எடுபடாது போலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டே வந்த நண்பர் பரமசிவம் எனக்கு முன் சம்மணம் போட்டு அமர்ந்தார்.

இங்கேயே சத்தியாக் கிரகம் செய்யப்பார்க்கிறீரா? என்று கேட்டேன்.

பிக்குமாருடைய சத்தியாக்கிரகமே பிசுபிசுத்துப் போயிற்றுது. நாங்கள் எங்கள் உரிமைகளுக்காகப் பெண்களும், ஆண்களுமாக இரவிலும் பகலிலும் உண்ணாமல் உறங்காமல் சத்தியாரக் கிரகம் செய்தபோது எங்களைக் கிண்டலும் கேலியும் செய்தது மட்டுமல்ல - ஆயுதப் படைகள் எங்களைத் தாக்கியபோது பார்த்து ரசித்தவர்கள் இன்று அதையே அனுபவிக்கிறார்கள். நாங்கள்தான் எப்போதோ சத்தியாக்கிரகத்தில் வைத்த நம்பிக்கையை கைவிட்டு பழந்தமிழர் வழியைப் பின்பற்றி வெற்றிநடைபோடத் தொடங்கிவிட்டோமே இனி அவர்கள் வேண்டுமானால் சத்தியாக்கிரகம் செய்து பார்க்கட்டும் என்று பரமசிவம் சொன்னார்.

சத்தியாக்கிரகம் மட்டுமல்ல பல விடயங்கள் திரும்பிவருகிற மாதிரி இருக்கிறதேயென்றேன்.

ஆமாம் நீர் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. எந்தப் பக்கத்தில் இருப்பது என்பது பற்றித்தானேசொல்ல வருகிறீர் என்று கேட்ட பரமசிவம் தொடர்ந்து சொன்னார்.

சந்திரிகா அம்மையார் அமைத்த கூட்டாட்சியிலிருந்து ஜே.வி.பி. விலகிவிட்டது. எங்களுக்கு எதிர்க்கட்சி வரிசையிலிருப்பதற்கு ஒழுங்குசெய்து தாருங்கள் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் ஜே.வி.பிக்கு முப்பத்தொன்பது ஆசனங்கள் ஒதுக்க வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் 39 ஆசனங்கள் ஒதுக்குவதற்கு இடமில்லை. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் எதிர்க்கட்சிகளும் அந்த இடங்களைப் பிடித்திருக்கின்றன. அப்படியானால் அரசாங்கப் பக்கத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமர்வதற்கான இடங்கள் போக, பின் வரிசையில் உள்ள ஆசனங்களில் ஜே.வி.பிக்கு இடம் ஒதுக்கப்படும். அதாவது எதிர்க்கட்சியில் முன்வரிசையில் ஜே.வி.பிக்குப் பிடிக்காத ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருப்பார்கள். இங்கேயும் எதிர்க்கட்சி முன்வரிசையில் சில ஆசனங்கள் முன்வரிசையில் கிடைக்கக்கூடும். ஆனால் அரசாங்கத் தரப்பில் அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குப் பின்னால் பெரும்பாலான ஜே.வி.பி. உறுப்பினர்கள் அமர்ந்திருப்பர். இதற்கு முன்பும் இப்படி ஆச னங்கள் ஒழுங்கு செய்யப்படவேண்டியிருந்தது. திருமதி சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சி இருந்தபோதும், பின்னர் ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலிருந்தபோதும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும், பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பிக்களும் எதிர்க்கட்சி வரிசையில் முழுமையாக அமர்வதற்கு இடம் இருக்காததால் ஆளும் கட்சியின் பின்வரிசை ஆசனங்களில் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்தது.

சிறிமா காலத்தில் 1970 ஆம் ஆண்டின் முதற் கட்டத்தில் குடியரசு அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக நாடாளுமன்றம் அரசியல் நிர்ணயசபையாக மாறி அரசியலமைப்பை தயாரித்தது. இந்தக் காலத்தில் தமிழரசுக் கட்சியினர் சபைக்கு வராமல் புறக்கணித்தனர். இந்தச் சமயம் சபை நடவடிக்கைகள் சில சந்தர்ப்பத்தில் "வீடியோ" படம் எடுக்கப்பட்டது. பத்திரிகைப் படப் பிடிப்பாளர்களும் படம் எடுத்தனர். இந்த நேரத்தில் தமிழரசு எம்பிக்களின் முன்வரிசை ஆசனங்கள் காலியாகக்கிடப்பது காண்பிக்கப்படக்கூடாது என்பதற்காக ஆளும் கட்சியைச் சேர்ந்த பின்வரிசை எம்.பிக்கள் காலியாகக் கிடந்த தமிழரசு எம்.பிக்களின் ஆசனங்களில் வந்தமர்ந்து இடத்தை நிரப்புவர். இதே போல் தமிழரசு எம்.பிக்களை எதிர்த்துப் பேசவிடாமல், ஆளும்தரப்பு எம்.பிக்கள் அமைச்சர்களுக்கு இடைநடுவில் தமிழரசு எம்.பிக்கள் அகப்பட்டு அவர்கள் குரலை அடக்கக்கூடியவிதமாக உரத்துச் சத்தம் போட்டுப் பேச வேண்டிய கட்டத்திலுமிருந்தனர் என்று பரமசிவம் சொன்னார்.

இன்று ஜே.வி.பிக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும் விதத்தில் இவர்களும், ஆளும் கட்சியினருக்கும், எதிர்க்கட்சியான யு.என்.பிக்கும் இடைநடுவிலிருந்து ஈடுகொடுக்கவேண்டி வரலாம் அல்லது அவர்கள் இவர்களுக்கு ஈடுகொடுக்க நேரிடலாம் என்றேன்.

போகிற போக்கைப் பார்த்தால் ஜே.வி.பி மீண்டும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்துவிடுமென்று பேசிக் கொள்கிறார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

இதுமட்டுமல்ல பொதுக்கட்டமைப்பில் சந்திரிகா அம்மையார் சார்பில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒருவரோ, அரசாங்க அதிகாரியொருவரோ கைச்சாத்திடலாம். விடுதலைப்புலிகள் தரப்பிலும் ஒருவர் கைச்சாத்திடக்கூடும். ஆனாலும் இந்தப் பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு வருமா? இதுவே சந்தேகமாயிருக்கிறது என்று சொன்னேன்.

தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடிக்கிறதுக்கே இவ்வளவுபாடாக இருக்குது. எவரோ மனமிரங்கிக் கொடுத்த உதவியைக் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க இவ்வளவு தடைகளா? இதுதான் இலங்கையில் தமிழ் மக்கள், இலங்கை - விடுதலை பெற்றகாலத்தில் இருந்து அனுபவிக்கும் அவலம் சகல இன, மத மக்களுக்கும் சமவுரிமையுடன் வாழ்வதாக சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் செல்லி வந்ததன் உண்மையை உலகம் இன்று அறிந்துவிட்டது. இதனால், இதை உலக நாடுகளுக்கு எடுத்துக்கூறி எங்களுக்கு உதவுவதாக இருந்தால், எங்களுக்கு நேரடியாக உதவியளியுங்கள். இல்லையேல் நாங்கள் எங்கள் தாயக பூமியில் அந்நியனிடம் இழந்த எங்கள் தமிழீழ அரசை மீண்டும் அமைத்து சுதந்திரமாக வாழ்வதற்கு வழி செய்யுங்கள் என்று திட்டவட்டமாகக் கேட்கும் காலம் வந்துவிட்டது. இவ்வளவு இடைஞ்சல்பட்டு எங்களுக்குப் பொதுக்கட்டமைப்பு வேண்டாம். நாங்கள் என்ன பிச்சையா கேட்கிறோம் என்று நேரடியாகச் சொல்லும் தருணம் வந்துவிட்டது என்று சொல்லிவிட்டு பரமசிவம் புறப்பட்டார்.

## வாசகர் நோக்கு

### தனிநாட்டுக் கோரிக்கை; அவசியமும் அவசரமும்!

பொதுக்கட்டமைப்பு சட்டவிரோதமானதென்று ஹெல உறுமய புத்தபிக்கு சோபிததேரர் கூறியிருக்கிறார். இதை நாடாளுமன்றம் ஏற்றால் போதாது சர்வ ஜன வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். 1995 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சந்திரிகா அம் மையார் ஒரு திட்டத்தை முன்வைத்தார். (இதைப் புலி களுக்கு அனுப்ப மாட்டேன் என்றும் சொன்னார்.) இந்தத் திட்டத்தை 'இந்து' பத்திரிகை வானாளாவப் புகழ்ந்தது. இந்தத் திட்டம் நாடாளுமன்றம் போனது. பின்னர் தெரிவுக்குழு என்றனர். கடைசியில் அது காணாமலே போய்விட்டது. நாடளுமன்றத்தில் சில விஷயங்கள் பேசிப்பேசியே காலம் கடத்துவதற்குப் பயன்படும். பொதுக்கட்டமைப்புக்கு முன் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும் என்றும் சோபித தேரர் சொல்கிறார்.

பொதுக்கட்டமைப்பின் பிரச்சினைதான் தனிநாட்டுக் கோரிக்கையை அவசியமாக்கியிருப்பதுடன் அவசரமாக்கியும் இருக்கிறதென்பதைத் தேரர் உணர வேண்டும்.

க.சண்முகநாதன் சங்குவேலி

## -செம்பியன் செல்வன் நினைவாக-

- வி.பி.தனேந்திரா -

# உதிர்ந்த பூக்களிடையே ஒரு உயிர்ப்பு

**சிறந்த கலை இலக்கியப் படைப்பாளியும், ஊடகவியலாளரும், நல்லாசானுமான நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வனின் 31 ஆவது நினைவுதினம் இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

1943 ஆம் ஆண்டு ஜனவரி 01 இல் திருநெல்வேலியில் ஆறுமுகம் தமர்தாம்பிகை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் தான் ஆறுமுகம் இராஜகோபால் (செம்பியன் செல்வன்). இவர் மிகச் சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்து ஆச்சியினாலே (அம்மாவின் தாய்) வளர்க்கப்பட்டவர். பெற்றோர் இல்லாத அண்ணன் கணேசபிள்ளையையும், இவரையும் ஆச்சிநாகமுத்து எவ்விதக் குறைவுமின்றி அறிவிலும்- உயர் ஒழுக்கப் பண்பிலும் வளர்க்கத் தவறவில்லை. நாகமுத்து ஆச்சி தமிழறிவு நிறையப் பெற்றவர். அவர் தனது பேரப்பிள்ளைகளைக் கண்டிக்கும் போது பழந்தமிழ் அறநெறி நூல்களின் மேற்கோள்களைக் காட்டியே கண்டிப்பார். இதனால் 'தமிழ்ப் பேராசிரியருக்கு அவர் எந்தளவும் குறைவில்லாதவர்' என்று செம்பியன் செல்வன் அடிக்கடி கூறுவார். செம்பியன் செல்வன் தனது சிறுவயது மற்றும் இளமைக்கால அனுபவங்களை மற்றவர்களுக்கு பகிரும் போது, ஆச்சியைப் பற்றி கருத்துப்பரிமாறாது, அவரது உரையாடல் ஒரு போதும் அமையாது. 'அமைதியின் இறகுகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பை செம்பியன் செல்வன் தனது ஆச்சிக்கு அர்ப்பணம் செய்யும் போது 'நான் இறந்தும் இடம் புல்முளைத்து மேடாய்ப் போகா வண்ணம், உயிரளித்து, எனைக் காத்து, உண்மையறிவூட்டி, ஆளாக்கி உலகத்தில் உன்பங்கு இதுவென்றுரைத்து, உலவவிட்டு காரியமே வாழ்வாக வாழ்ந்து காட்டும் நாகமுத்தெனும் நான் காணும் தெய்வமான என் ஆச்சியின் காலடிக்கு' என்கிறார். இதிலிருந்து; செம்பியனின் உயர் ஆளுமை விருத்திக்கு ஆச்சியின் பங்களிப்பு அதிகமாக இருந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

செம்பியன் செல்வன்சிறுவனாக இருந்த போது, அவரது அண்ணன் கணேசபிள்ளை எழுத்தாற்றலை வளர்க்கக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் அவர் யாழ். இந்துவில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே எழுதத் தொடங்கி விட்டார். இந்தச் சூழல் எப்படித் தோன்றியது என்றால், அண்ணன் கணேசபிள்ளை 1952 ஆம் ஆண்டுகளில் தன் நெருங்கிய நண்பருடன் கையெழுத்துச் சஞ்சிகையாக, 'மாற்று' சஞ்சிகை நடத்தி வந்தார். அந்த நண்பர் பத்மநாதன் அமெரிக்க நாட்டில் உயர் அறிவியியல் அதிகாரியாக உள்ளார்.

பத்மநாதன் 'தாரா' என்ற மாதக்கையெழுத்து ஏட்டை தயாரித்து அனுப்ப; செம்பியன் செல்வனின் அண்ணன் - 'செங்கதிர்' என்ற ஏட்டை அனுப்புவார். இதில் சிறுவர் பகுதியைச் செம்பியனின் ஆக்கங்கள் அலங்கரித்து நிற்கும். இதில் 'சி.ஐ.டி சிங்காரம்' என்று அப்போது அதில் எழுதிய சின்னஞ் சிறு நாவலும் உள்ளடங்குவதாக, அவர் சிறுவயது அனுபவத்தை மீட்டிப் பார்க்கும் போது கூறுவார். (புலரி-ஐப்பசி,மார்கழி - 2004)

இந்தப் பின்னணிகளினால் செம்பியன்; அண்ணன் கணேசபிள்ளை மீது கொண்டுள்ள அன்பும் , பாசமும் , மரியாதையும் அதிகமாகும். இதற்குக் காரணம் செம்பியன் சுயமாக வளர்வதற்கு உந்து சக்தியாக அண்ணன் இருந்திருக்கிறார். 'நான் நானாகவே வளர என்னுள் ஒருபோதும் தன்னை புகுத்தாது என்னைச் சுயம்புவாக எண்ணத்தாலும் செயலாலும் வளர்த்து, எனக்கு எல்லாமாக நின்ற அண்ணன்... என்று 'நெருப்பு மல்லிகை' நாவலிலும், 'அன்றெனக்கு அண்ணைக்குள் அன்னையாய் நீ புரிந்த தவம் ஊரறியும்; உறவறியும் மொழியறியா - நிலைமாற விழியொழுகு நீருடனே தாழ்பணிந்து...' என்று 'சர்ப்பவியூகம்', சிறுகதைத் தொகுதியிலும் அர்ப்பணம் செய்கிறார்.

அன்னைக்கு அன்னையாக இருந்த அண்ணன்; செம்பியனின் வளர்ச்சிப் பாதைக்கு தடம் பதித்துக் கொடுத்தார். இதனால் அவர் பக்தியுணர்வுடன் இரு நூல்களையும் அர்ப்பணித்தது நன்றியுடன் கூடிய பாசமே ஆகும்.



யாழ்ப்பாணம் இந்து தமிழ் ஆரம்பப் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் செம்பியன் செல்வன் கல்வியைக் கற்றார். இங்கு கம்யூனிஷ்டாக வாழ்ந்து மறைந்த கார்த்திகேசன், அற்புதரத்தினம், இலக்கியவாதிகளான வை.ஏரம்பமூர்த்தி, க.சிவராமலிங்கம் முதலிய திறமைமிக்க ஆசிரியர்கள் இவருக்குக் கிடைத்தது. மற்றும் இலக்கிய ஆர்வமும், உத்வேகமும் கொண்ட மூத்தவர்கள் கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் பஞ்சாட்சரம் (ச.வே அல்ல இவர் இன்னொருவர்) முதலியோரும், சகதோழர்களாக விளங்கிய செங்கை ஆழியான், முனியப்பதாசன், து.வைத்திலிங்கம், வை.அ.கைலாசநாதன் என்னும் 'அங்கையன்' முதலியோரும் இலக்கியத்துறையில் செம்பியன் செல்வனை வளர்த்தெடுப் பதிலும், படைப்புலகில் நாட்டம் கொள்ளவும் வைத்துள்ளன. இளம் வயதிலேயே அவர் சிறந்த வாசிப்பாளனாக இருந்தார். குடும்ப வறுமை அவருக்குப் புத்தகங்களை- சஞ்சிகைகளை சொந்தமாக வாங்கத் தடை விதித்தது. எனினும் தனது ஆருயிர் நண்பன் செங்கை ஆழியானிடம் இருந்தும்; நூலகங்களில் இருந்தும் நூல்கள் - சஞ்சிகைகள் பெற்று நிறைந்த வாசிப்பாளனானார்.

செம்பியன் செல்வன் 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக் கலைப் பட்டதாரியானார்.

இவர் 17 ஆவது வயதிலே பல்கலைக்கழகம் சென்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அப்போதே அவர் எழுதவும் ஆரம்பித்துவிட்டார். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கியமானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல் மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாகவும் இருந்துள்ளனர். செங்கை ஆழியான், செ.யோகநாதன், குந்தவை, துருவன், அங்கையன், கைலாசநாதன், நவசோதி, கலா பரமேஸ்வரன் என அந்தப் பட்டியல் நீளும்.

இவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில், ஒன்பது சிறுகதைகளைத் தாங்கிய 'காலத்தின் குரல்கள்' எனும் தொகுப்பு மார்ச் 1961 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதில் 'புதிய பரம்பரையின் துருவ நட்சத்திரம்' என்னும் அவரது சிறுகதை பிரசுரமாகியது. 1962 ஜனவரியில் பன்னிரண்டு சிறுகதைகள் தாங்கிய 'கதைப்பூங்கா' என்னும் தொகுப்பு வெளிவந்தது. இதில் 'பாதிமலர்' எனும் அவரது சிறுகதை பிரசுரமாகியது. மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும்' என்ற தொகுப்புக்கு; செம்பியன் செல்வனே தொகுப்பாசிரியராக இருந்துள்ளார்.

இதில் 'வர்க்கங்கள்' என்னும் அவரது சிறுகதையும் இடம் பெற்றுள்ளது. 1964 ஆம் ஆண்டில் 'யுகம்' எனும் சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்தது. இந்த நான்கு சிறுகதைத் தொகுப்புகளிலும் செம்பியன் செல்வனின் பங்களிப்பு அதிகமாகவே இருந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

செம்பியன் செல்வன் பல்கலைக்கழக சஞ்சிகைகளுக்கு எழுதியதோடு மட்டும் நின்றுவிடாது, ஈழத்தின் பிரபல தினசரி பத்திரிகைகளிலும் தனது எழுத்துத் திறமையை வெளிப்படுத்தினார். பெரிய அறிஞர்களின் படைப்பையே தாங்கி வரும் 'சாஹித்திய' மண்டல வெளியீடாகிய 'கலைப்பூங்கா' இவர் பல்கலைக்கழக மாணவ நிலையிலேயே எழுதிய கட்டுரை ஒன்றை விரும்பிப் பிரசுரித்தது. இது செம்பியன் செல்வனின் உயர் ஆற்றலைப் படம் பிடித்துக்காட்டுகிறது. இவர் இளமையிலேயே உன்னத படைப்புக்களை பல்துறையிலும் மேற்கொண்டார். பல்துறையிலும் பரிணமித்தார்.

செம்பியன் செல்வன் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது. இதற்கு இவரின் நாடக பிரதியாக்கங்களுக்குக் கிடைத்த பரிசில்கள் கட்டியம் கூறும்.

1966, 1967 ஆம் ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் 'இந்திரஜித்', 'இருளில் எழும் பெரு மூச்சுக்கள்' இரண்டாம், முதலாம் பரிசுகளைப் பெற்றன. 1975, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் 'சின்ன மீன்கள்', 'எரியும் பிரச்சினைகள்' முதற் பரிசுகளைப் பெற்றன.

அன்னாரின் 'மூன்று முழு நிலவுகள்' என்னும் நாடக நூல் ஆசீர் வெளியீடாக 1967 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இந்த நாடகம் பற்றி பேராசிரியர் சு.வித்தியானந்தன் இராமநாதனின் அசோகனின் காதலி, எஸ்.பொன்னுத்துரையின் சதுரங்கம், நாடகவரிசையில் செம்பியனின் 'மூன்று முழு நிலவுகள்' நாடகம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. மேடைக்கும், வாசினைக்கும் ஒப்பவே உயிரூட்டும் உரைநடையும், நாடகமறை கவர்ச்சியும் கொண்ட நல்ல நாடகம் என்று கருத்துக் கூறியுள்ளார்.

ஈழநாடு தனது 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய இலக்கியப் போட்டியில் செம்பியன் செல்வனின் 'விடிய இன்னும் நேரமிருக்கு' என்னும் ஓரங்க நாடகம் முதல் இடம்பெற்றது. இந்த நாடகத்தில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார். ஏழைக் குடும்பமொன்றின் ஆசா பாசங்களையும், அவலங்களையும் இந்த நாடகம் சித்தரிக்கிறது. ஈழநாடு பரிசு பெற்ற நான்கு நாடக பிரதிகளும் 'விடிய இன்னும் நேரமிருக்கு...' எனும் நாடகம் புத்தகமாக ஜனவரி 1971 ஆம் ஆண்டில் ஈழநாடு வெளியீடாக வந்தது.

செம்பியன் செல்வன் நாடகத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக 1977 -1983 ஆம் ஆண்டுவரை இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் தமிழ் நாடக மதியுரைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் பேராசிரியர் சு.வித்தியானந்தனுடன் இணைந்து வெளித்தெரியா நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் பலரைக் கௌரவித்தமையில் செம்பியனுக்கும் பங்குண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுகதைத் துறையில் முக்கியமானவராக செம்பியன் செல்வனை உள்ளடக்கிக் கொண்டாலும், அவர் சிறந்ததொரு நாவல் ஆசிரியராக ஈழத்தில் பேசப்படுமளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளார். அந்த வகையில் 'கானகத்தின் கானம்' என்ற நாவல் 'மீரா' வெளியீடாக 1989.08.26 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நாவல் அச்சாகிய கால அநர்த்தப் பயங்கரச் சூழலில் வெளியீட்டாளர், எழுத்தாளர் பாதுகாப்புக் கருதி 64 பக்கங்களை தியாகம் செய்த நாவல் ஆகும். இந்த நாவல் பற்றி பதிப்பாசிரியர் டி.லிகோரி 'தெளிந்த நீரோடையாக ஆரம்பிக்கும் இந்த நாவலைத் தென்றலாகக் கொண்டு சென்று புயலாகவே முடித்திருக்கிறார் செம்பியன் செல்வன்' என்றார்.

செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவலும் மிக உன்னத படைப்பாகும். இந்த நாவல் அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் ஆகும். வீரகேசரியின் 73 ஆவது பிரசுரமாக நவம்பர் 1981 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நாவலின் கருவூலத்தைப் பற்றி அவர் குறிப்புரை தருகையில் - 'பிரதேச நாவல்களில் கிராமியம் சார்ந்தவை ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறியில் இயங்கும் தன்மை தனித்துவ மானவை.' ஆனால்; நகர் பிரதேசங்களில் பல திசைகளிலிருந்தும் பல்வேறு தேவைக்காக மக்கள் நகர்ந்து வந்து குடியேறியதால் (அதனாற்றான் நகரம் என்றாயிற்றோ?)

ஒரு கலப்பின வாழ்க்கை நெறிப் பண்புகள் காணப்படுகின்ற சடங்கு, சம்பிரதாயங்கள், மொழிவழக்கு, இனங்கள், மதங்கள், நடைமுறைப் பழக்கங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட தொடர்புக்கப்பால், ஒன்றுக்கு ஒன்று சம்பந்தப்படாத சம்பவங்கள் கூட நகர் முழுவதையும் பாதித்து விடும் ஆபத்து தோன்றுகிறது. எதிலும் ஒரு தெளிவான வரையறையைக் காணமுடியவில்லை என்ற உண்மையை இந்த நாவல் புலப்படுத்துகிறது' என்கிறார். 'நெருப்பு மல்லிகை' நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில், 81 நாவல்களிடையே கலாநிதி பொன். பூலோகசிங்கம், இ.இரத்தினம், மு.பொன்னம்பலம் ஆகியோரால் ஏகமனதாக முதலாவதாகத் தெரியப்பட்டு, அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் ஈழமுரசில் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டில் இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அடங்கி அழிந்து போயின. இது தாயக விடுதலைக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது. 'நிழல்கள்' 1963 ஆம் ஆண்டுகளில் சுதந்திரனில் - செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ்ப்பாண சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல், செங்கை ஆழியான் எழுதிய அத்தியாயங்கள் சுவைப்படக் கதையைச் சொல்லி நகர்த்துவனவாக அமைய, செம்பியன் செல்வனின் அத்தியாயங்கள் கருத்துக்களைச் சொரிந்து நாவலின் இறுக்கத்தைப் பேணியுள்ளன. மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்', 'கர்ப்பக்கிரகம்' ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

குறுங்கதையும், உருவகக் கதையும் செம்பியன் செல்வனினால் சிறப்பு பெறுமளவுக்கு அதிக பங்களப்பைச் செய்திருக்கிறார். இவர் ஈழத்தில் தரமான குறுங்கதைகளைப் படைத்துள்ளார். அதற்கு இவரது 'குறுங்கதை நூறு' சிறந்த எடுத்துக்காட்டு. இந்த நூல் 'நான்' வெளியீடாக 27 டிசம்பர் 1986 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நூலின் வெளியீட்டாளர் வின்சன் பற்றிக் 'இறுக்கமாகவும், சுருக்கமாகவும் கருத்துக்களைத் தீர்க்கமாகச் சிந்திக்கச் செய்வதில் வல்லவர்' என செம்பியன் செல்வனின் திறமையைப் பாராட்டுகின்றார். இவ்வாறு நூலுருப் பெற்ற குறுங்கதைகளை விட ஏராளமான குறுங்கதைகள் பல்வேறு சஞ்சிகைகள் - பத்திரிகைகளில் எழுதியுள்ளார் என்பது இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

உருவகக் கதைத்துறையில் 'சு.வே, எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ), எம்.ஏ.ரஹ்மான் ஆகியோரின் வரிசையில் செம்பியன் செல்வனும் காத்திரமான உருவகக் கதைகளைப் படைத்துள்ளார். கவித்துவமான சொற்களும், புதிய உரைநடைகளும் இவரது உருவகக் கதையை அலங்கரிக்கும், ஐம்பதுக்கு மேற்பட்ட உருவகக் கதைகளை இவர் படைத்துள்ளார்.' இவ்வாறு செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

உருவகக் கதைகள் தொகுக்கப்பட்டு, அச்சிடப்பட்ட நிலையில் இடப்பெயர்வின் இழப்புக்கு இரையாகிப்போன நூலாகும். இந்த இலக்கிய வடிவத்துக்கு புதியதோர் பரிணாமம் கொடுத்துள்ளார்.

செம்பியன் செல்வன் இதழியியல் துறையிலும் ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளார். 1964 -1970 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எம்.வி. ஆசீர்வாதத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, நடத்தப்பட்ட 'விவேகி' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்துள்ளார்.

மேலும் மயில் அமிர்தலிங்கத்தால் நடத்தப்பட்ட ஈழமுரசு தினசரியின் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையாக 'அமிர்த கங்கை' 1986 ஆம் ஆண்டில் வெளிவந்தது. 'அமிர்த கங்கை' 12 இதழ்களே வெளிவந்தது. ஆனால் இந்த இலக்கிய சஞ்சிகை இன்றும் இலக்கிய உலகில் பேசப்படுகின்ற தரமுடையதாக இருக்கிறது. இந்தச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். இங்கு இவரது பணி ஒரு இலக்கிய சஞ்சிகை எப்படித் தரமுடையதாக வெளியிட வேண்டும் என்பதை இதழியல் உலகுக்கு எடுத்துக்காட்டாய் இருந்தமையே ஆகும்.

யாழ். இலக்கிய வட்டம் வெளியீடாக 1966 ஆம் ஆண்டில் முதலாவது ஆண்டு மலராக 'இலக்கியம்' வெளிவந்தது. இந்த மலரின் ஆசிரியர்களாக செம்பியன் செல்வனும், யாழ்.வாணனும் பணியாற்றியுள்ளனர். மேலும் செம்பியன் செல்வன் யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புக் கற்கையின் போது 'கலைஞானம்' என்ற சஞ்சிகை 1982-1983 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இதன் ஆசிரியராகவும் இவர் விளங்கினார்.

தொடரும்...

# வடமராட்சி வலய பாடசாலைகளின் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் முதலாமிடம் பெற்றோர் விபரம் வருமாறு :-

**வாசிப்பு**

து.மாலோகன் (மாணிக்க வாசகர் வித்தியாலயம்), ப.கௌதமன் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

இ.திவாகரன் (கரணவாய் தமோ. வித்தியாலயம்)

**ஆக்கம் எழுத்து**

உ.கீர்த்தனா (கரணவாய் தமோ.வித்தியாலயம்)

**கட்டுரை வரைதல்**

வ.சுஜீவன் (ஹாட்லிக் கல்லூரி)

**கட்டுரை கடிதம் எழுதுதல்**

சு.தரணிகா (வடமராட்சி மத்திய மகா வித்தியாலயம்)

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

ஆ.மோகனப்பிரியா (உடுப்பிட்டி மகா வித்தியாலயம்)

**தமிழியற் கட்டுரை வரைதல்**

மு.மயூரிக்கா (விக்னேஸ்வராக் கல்லூரி)

**இலக்கணப் போட்டி**

அ.தனுஷ்கா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**திறனாய்வுப் போட்டி**

சொ.வருணா (விக்னேஸ்வராக் கல்லூரி)

**குழு நாடக ஆக்கம்**

சி.சிவகுமாரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), க.இளவரசன் (விக்னேஸ்வராக் கல்லூரி)

**கவிதை ஆக்கம்**

ப.தர்சிகா (வட இந்து மகளிர் கல்லூரி), க.தர்சினி (வட இந்து மகளிர் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

இ.கலைவாணி (வட இந்து மகளிர் கல்லூரி), அ.ஜசிந்தா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**பேச்சு**

த.கோகுலன் (மாணிக்கவாசகர் மகா வித்தியாலயம்),ச.கார்த்திகாயினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), அ.மதுரா (வட இந்து மகளிர் கல்லூரி), பா.தர்மினி (வட இந்து மகளிர் கல்லூரி), த.விசோபன் (ஹாட்லிக் கல்லூரி)

**பாவோதல்**

கி.அபிரா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), பு.ஆரணி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரா.சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.தயாளினி (அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயம்), செ.சுகன்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**இசையும் அசைவும்**

மு.வெண்ணிலா (வட இந்து மகளிர் கல்லூரி)

**இசை தனி**

சி.ஜீவந்திகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜெ.ஹம்சவதி (வடமராட்சி மத்திய மகா வித்தியாலயம்), இ.அபிராமி (இமையாணன் அ.த.க. பாடசாலை), கௌ.சரண்யா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

**இசை குழு I**

தூசிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**இசை**

சி.சிவநந்தினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சி.காயத்திரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஏ.அகல்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), நா.மயூரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சி.நிரஞ்சனா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ம.சஞ்சிபா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), இ.சரண்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), யோ.ராஜினி (மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), செ.அபர்ணா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**இசை (குழு 2)**

த.இ.ஜெனரீஸ்வரன் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), சி.சத்தியராம் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), சி.சுருதிலயம் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), இ.கோபிராகவன் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லாரி),

(தொடரும்)


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)



**மனோகரா** யாழ்ப்பாணம்

அதிரடி வெளியீடு!
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்



**அந்நியன்**
**anniyan**

இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
விசேட காட்சிகளும் உண்டு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்டி பென்டன்ஸ் டே
டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
**THE DAY AFTER TOMORROW**
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்
பாடசாலையூடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்
காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30



**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
**சேதுபதி I.P.S**
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)



**ராஜா** யாழ்ப்பாணம்

ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த



**சந்திரமுகி**
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30



**நாகம்ஸ்** சுன்னாகம்

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த
**ஜித்தன்**
22 ஆம் திகதி முதல்
கற்கக் கசடற



காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)



## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com



## A/L பரீட்சையில் சித்திபெற வாழ்த்துக்கள்

வீட்டிலிருந்தே 90 நாட்களில் தபால் மூலம் ஆங்கிலம் கற்கலாம்



எப்படி தெரியுமா?

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படும். பாடநெறி முடிவில் Dip.in. English சான்றிதழும் வழங்கப்படும்

T.P மூலம் விபரங்களைப் பெற

0812 - 201 433, 0777 - 806 606

படியுங்கள்... பரிசு பெறுங்கள்!

பாட நெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசு ஒன்று வழங்கப்படும்

தபால் மூல ஆங்கில பாடநெறியை தொடர விரும்பும் உங்கள் நண்பர்களின் பெயர் முகவரியை ஒரு தாளில் எழுதி உங்கள் விபரத்தையும் எழுதி அனுப்புங்கள்

J.E.I. INSTITUTE, P.O.BOX. 119. KANDY.

(சி -4209)


## காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

**கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் 2005-06-30 ஆம் நாள் முதல் செயற்படுத்தப்படவுள்ளதென்பதை சகலரினதும் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.**

1) காணித் தேவைக்காக காடுகளை அழிப்பதும், பற்றைக் காடுகளை வெட்டுவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

2) காணி வழங்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யாது, உரிமையாளரும் இங்கு இல்லாது பயன்படுத்தப்படாதிருக்கும் காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சி செய்வதோ, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாது உறவினர் ஆட்சி செய்வதோ முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது.

3) 2இல் காட்டப்பட்ட காணி தொடர்பில் எவரும் தற்போது இருப்பாரேயானால் அவர் தமிழீழ நிர்வாகசேவை நடுவப் பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமில்லாது தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4) பொதுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், நீர்ப்பாசன குளப்படுக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பனவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை எவராவது அத்துமீறிப் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்படுகின்றது. அத்துமீறிப் பிடித்து ஆட்சிசெய்து வந்தால் அக்காணிகளை உரிய தேவைக்காக மீள சுவீகரிப்புச் செய்யப்படும்.

5) 4இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் ஏதாவது காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சி செய்து வருவாரேயானால் அவர்கள் தாம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பான விபரத்துடன் தமிழீழ நிர்வாக சேவை, நடுவப் பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமின்றித் தொடர்புகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6) இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச காணிகளை துப்பரவு செய்து வசித்து வந்த குடும்பங்கள் மீளத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றதும், அக் காணிகளைத் தற்போது வேறு நபரால் ஆட்சிப்படுத்தவோ அல்லது அபிவிருத்தி செய்யவோ முடியாது. அக் காணி பொதுத் தேவைக்காக எடுக்கப்படும்.

7) மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளுக்குக் கீழ்ப்படியாது அதனை மீறிச் செயற்படுபவர்கள் மீது தமிழீழ காவற்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


நன்றி

**தமிழீழ நிர்வாக சேவை,**
**நடுவப் பணியகம்**
**தமிழீழம்.**

(சி -3674)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அவுஸ்ரேலிய அணியை பங்களாதேஷ் வென்றது!



லண்டன்

நட்வெஸ்ட் ஒரு நாள் போட்டித் தொடரில் நேற்று பலம்மிக்க அவுஸ்ரேலிய அணியை 5 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணி தோற்கடித்தது.

*ஸ்கோர்*

அவுஸ்ரேலியா - 249/5 (50 ஓவர்)

பங்களாதேஷ் - 250/5 (49.2 ஓவர்)

(முழு விபரம் நாளைய விளையாட்டரங்கில்)

## திருமலையில் தமிழ் மக்கள்...

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுஉறுப்பினர்களின் வாகனம் காடையர்களால் அடித்து நொருக்கப்பட்டது. உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸாரால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் பாதுகாப்பாக சேருநுவர பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு நீண்ட நேரம் அங்கேயே தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, படகுகளை ஏற்றிச் சென்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்குச் சொந்தமான லொறியொன்று நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சேருநுவர பகுதியை அடைந்தபோது, காடையர்களால் அது மறிக்கப்பட்டு தீயிட்டு அழிக்கப்பட்டது. இதனால் அதில் எடுத்துச்செல்லப்பட்ட இரு படகுகளும் எரிந்து நாசமாகின.

இதேவேளை ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இவர்களில் 15 பேர் ஈச்

சிலம்பற்று வைத்தியசாலையிலும், 12 பேர் கிளிவெட்டி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் சிலர்தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

அலிஒலுவ பகுதிக்கு அருகிலிருக்கும் தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் காடையர்களின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாக திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையிலிருந்து மூதூருக்கான தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருப்பதுடன், கடல்வழியாகவே நேற்று மூதூருக்கு மக்கள் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த வன்முறைகளை அடுத்து மகிந்தபுர அலிஒலுவ, சேருநுவர பகுதிகளில் பதற்றம் நிலவுவதாக தெரியவருகிறது. (01)

### புலிகளின்...

ஆகியனவே தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலையடுத்து பெரும் எண்ணிக்கையான பொலிஸார் ஆயுதங்களுடன் வீதிகளில் காணப்பட்டதாகவும், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேவர அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல்களில் புலிகளின் அலுவலகம் மிகுந்த சேதமடைந்தபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### அமைச்சரவை...

ஜே.வி.பியின் வெளியேற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என்றும் பிரதியமைச்சர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (தே)

## லெப். ஜெனரல் லயனல் பலகல்லவிடம் லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை!

கொழும்பு

லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவத் தளபதியாக இருந்தபோது இடம்பெற்ற கொள்வனவுகளில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்பட்டு அவர் மீதுலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது

கேள்விப்பத்திரம் கோராமல் இராணுவத்திற்கு 150 மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்ததாக முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்லவுக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாகவே லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக கடந்த வாரம் லயனல் பலகல்லவிடம் சுமார் நான்கு மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

### பொதுக்கட்டமைப்...

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமாக இருந்தால், விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய சட்டரீதியான அந்தஸ்து கிடைக்குமென ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (தே)

### ஜனாதிபதித்...

பாட்டை பிரதமரிடம் வழங்கியுள்ளது.

இரு கட்சிகளின் சார்பிலும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்சவை நிறுத்துவதற்கு ஜே.வி.பி ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் பின்னர் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியை கொண்டுநடத்தும் ஜே.வி.பியின் திட்டத்திற்கமையவே பிரதமர் மகிந்தவுடன் நெருங்கிய உறவுகளை அந்தக்கட்சி வலுப்படுத்தி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ்....

தலைவர் எஸ்.பரமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேனாட் அடிகளார், யாழ். பல்கலைக்கழக மாணவி யாழினி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

நல்லை ஆதீன முதல்வர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கழகத் தலைவர்கள் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு குடாநாட்டிலுள்ள புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் குடாநாட்டு மக்களால் முன்வைக்கப்படும் எண்ணக் கருக்கள் சேகரிக்கப்பட்டு பொதுப் பிரகடனமாக வெளியிடப்படவுள்ளது.

# கிழக்கு கடற்படைத் தளபதி கொழும்புக்கு இடமாற்றம்!

கொழும்பு

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றக்கோரி தமிழ்மக்களால் ஹர்த்தால் நடத்தப்பட்டவேளை புத்தர்சிலையின் பாதுகாப்புக்கு கடற்படையினரை ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிழக்குப் பகுதிக்கான கடற்படை கட்டளை அதிகாரியை உடனடியாக இடமாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிழக்கின் கடற்படை கட்டளைத் தளபதி - புத்தர்சிலையை பாதுகாப்பதற்கு கடற்படையினரை ஈடுபடுத்தியதுடன் சிங்கள மக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்த அறிக்கையில் -

இவரின் இடமாற்றத்துக் குக் காரணமாக அமைந்ததாகவும், கடந்த வாரம் இவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

# நீரில் இருந்து மின்சாரம் முத்தையன் கட்டில் உற்பத்தி!

கிளிநொச்சி

தனது காணியில் நீரைத் தேக்கி அதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வெற்றிகண்ட ஒருவருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு லட்சம் ரூபா காசோலையும் ஒரு சைக்கிளையும் வழங்கி அவரது திட்டத்தை ஊக்குவித்துள்ளது.

முத்தையன் கட்டு வலது கரையைச் சேர்ந்த ரகுபதி இராதாகிருஷ்ணன் என்பவரே இந்த மின்சார உற்பத்தியில் ஈடுபட்டவராவார்.

தனது காணிப்பகுதியில் நீரைத் தேக்கி அதை 8 அங்குல குழாய் ஒன்றில் செலுத்தி அதன் கீழ் விசிறி ஒன்றையும் பொருத்தி இவர் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

இவரால் இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பரீட்சார்த்தமாக அருகிலுள்ள வீடுகளுக்கும் ஆலயம் ஒன்றிற்கும் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மேல்மாகாண முதல்வர் நாளை பதவி கவிழலாம்

கொழும்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து ஜே.வி.பி வெளியேறியுள்ளதால் மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிராக நாளை கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் ஆளும்கட்சி தோல்வியடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

தற்போது மேல்மாகாண சபையின் 104 உறுப்பினர்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 39 உறுப்பினர்களும், பொதுஜனஐக்கிய முன்னணிக்கு 36 உறுப்பினர்களும், ஜே.வி.பிக்கு 23 உறுப்பினர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 4 உறுப்பினர்களும், 2 சுயேட்சைக் குழு உறுப்பினர்களும் உள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் 36 உறுப்பினர்களைத் தவிர்த்தால் எதிர்க்கட்சியில் 68 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அதனால் முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஆளும் கட்சி தோல்வியடையக்கூடிய நிலை ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயை அதற்கு முன்னர் பதவி விலகுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ள போதிலும் அவர் அதற்கு மறுத்து வருவதாகவும் தெரியவருகிறது.

## யுனிசெப்புடன்...

சிறுவர்கள் பற்றியும் தற்போது ஆழிப்பேரலையால் ஏற்பட்ட அழிவுகள் பற்றியும் - பாதிப்புக்கள் பற்றியுமே கூடுதலாகக் கலந்துரையாடினோம்.

ஏற்கனவே 20 வருடகால போரால் சிறுவர்களும் பெண்களுமே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவு பாடசாலைகள் அழிந்துள்ளன. சிறுவர்கள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர். சிறுவர்களின் எதிர்காலமே சூன்யமாக்கப்பட்ட நிலையில்தான் தற்போது விடுதலைப் புலிகள் தலைமையில் சிறுவர்களின் நலன்களில் தீவிர கவனமெடுத்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

பெற்றோர்களை இழந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் எமது தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் பராமரித்து வருகிறோம். சிறுவர்களின் நலன்கள் தொடர்பில் மனிதாபிமானப் பணிகள் பலவற்றை முன்னெடுத்து வருகிறோம். சிறுவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வளப்பற்றாக்குறை, மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் உள்ள சிக்கல்கள், குடும்ப வறுமை, வேலைவாய்ப்பின்மை ஏனைய வசதியீனங்கள் பற்றி இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினோம்.

சிறுவர்களின் எதிர்காலத்தில் கல்வி, போசாக்கு போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு யுனிசெப்புடனும் ஏனைய சிறுவர் அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படவுள்ளோம் என்ற எமது தலைமைப் பீடத்தின் விருப்பத்தைத் தெரிவித்துள்ளோம். யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளரும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை ஆட்சேர்ப்பதாக விடுதலைப் புலிகள் மீது யுனிசெப் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பெரிதாகப் பேசப்படவில்லை. இருந்தும் சிறுவர்கள் ஏன் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பது பற்றி விளக்கியுள்ளோம்.

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் சிறுவர்களைக் குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டபோதே அதிலிருந்து மீள்வதற்கும் சிறுவர்கள் தம்மை தற்காத்துக்கொள்ளவுமே ஆயுதம் ஏந்தினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இருப்பினும் இன்று நிலைமைகள் மாறியுள்ளன. பெருமளவு நிலப் பிரதேசங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நடைமுறை அரசை இயக்கிக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் எமக்கான தேசிய இராணுவத்தை கட்டியெழுப்பக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளோம்.

ஆகவே, இன்று நிலைமைகள் மாறியுள்ளன. இந்த நிலையில் சிறுவர்களுக்கான எதிர்காலத்திட்டங்கள், மறுவாழ்வுப் பணிகளைத்தான் முன்னெடுத்து வருகிறோம். இதை சிறுவர்கள் ஆட்சேர்ப்பு, சிறுவர் படைசேர்ப்பு என்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது எந்தவிதத்திலும் பொருத்தமற்றது.

சிறுவர் தொடர்பாக எழும் குற்றச்சாட்டுக்கள் - தொடர்பில் இது முழுக்க முழுக்க அரசியலாக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் இல்லை. ஏனைய இடங்கள் அனைத்திலுமே சிறுவர் துஷ்பிரயோகம் மோசமாக இடம்பெற்று வருகிறது.

பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், வீதிகளில் சிறுவர்கள் பிச்சையெடுத்தல் என்பன இராணுவப் பகுதிகளில் இடம்பெறுகின்றன. மிக மோசமான சிறுவர் உரிமை மீறல்கள் எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இடம்பெறுகின்றன என்பதையும் இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டினோம்.

எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர்கள், மாணவர்களின் நலன்களை மேலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பபு ரெக்ஸ்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள், சுடிதார் வகைகள், கவுஸ்கோட் துணி வகைகள், லேடீஸ் கவுன், ரீ சேட், ஸ்கேட், பிளவுஸ், கிப்ட் வகைகள், ஓரிபிலேம் கிறீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி,
திருநெல்வேலி.

திருமறைக் கலாமன்றம்
கவின் கலைகள் கல்லூரி
COLLEGE OF FINE ARTS
ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

திருமறைக் கலாமன்றத்தின் 'கவின் கலைகள் பயிலகம்' மீளுருவாக்கம் செய்யப்பட்டு கவின் கலைகள் கல்லூரியாக புதிய பொலிவுடன் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இக் கல்லூரிக்கு பின்வரும் கலைகளை பகுதிநேரமாகக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

♣ வாய்ப்பாட்டு ♣ மிருதங்கம் ♣ கிற்றார்
♣ பரதம் ♣ வீணை ♣ ஓர்கன்
♣ கதகளி ♣ வயலின் ♣ ஓவியம்
♣ புல்லாங்குழல்

குறிப்புக்கள் :
♠ விண்ணப்பிப்பவர்கள் ஏதாவது பல்கலைக்கழகமொன்றில் குறிப்பிட்ட பாட நெறியைக் கற்றுத் தேர்ந்தவராகவோ அல்லது அதற்குச் சமமான சான்றிதழைப் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.
♠ அல்லது வட இலங்கை சங்கீத சபை ஆசிரியர் தரம் சித்திபெற்ற, 5 வருடத்துக்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள்.
♠ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
♠ விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து அனுப்பி வைக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 30-06-2005 வியாழக்கிழமை ஆகும்.
♠ விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டிய முகவரி : பொதுச் செயலாளர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2393
திருமறைக் கலாமன்றம்
(C/4211)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.